Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 31 செவ்வாய்க்கிழமை (15.07.2014) பக்கங்கள் 20 ஓசை -287

# அடிப்படை உரிமை மீறல் வழக்கு பின்வாங்கினார் முதலமைச்சர் விக்கி





(கொழும்பு)

**வடமாகாண முதலமைச்சருக்கு எதிரான அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் நீதிமன்ற விதப்புரைகளை ஏற்று மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு தான் வழங்கிய உத்தரவுகளை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சம்மதித்துள்ளார்.**

பிரதம செயலாளரின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் முதலமைச்சர் அவருக்கு சில உத்தரவுகளை ஏற்கனவே போட்டிருந்தார்.

இந்த உத்தரவுகளால் தனது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாகவும், இதனை எதிர்த்து பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வடமாகாண பிரதம செயலர் மற்றும் அவரது பணியாளர்களுக்கு, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னர் அனுப்பிய சுற்றறிக்கையையும் ஊயர்நீதிமன்றம் நேற்று நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளது.

முதலமைச்சரின் இந்த சுற்றறிக்கை தமது அடிப்படை உரிமையை மீறுவதாகவும் தெரிவித்தே வடமாகாண பிரதம செயலர் விஜயலட்சுமி ரமேஸ் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கை மாகாண பிரதம செயலரின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக கண்

19 ஆம் பக்கம் பார்க்க

## போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அருகில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் இன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்புப் பேரணிக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்தப் போராட்டத்தைத் தடைசெய்யுமாறு கோரி வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக போட்டியிட்ட நா.பொன்னம்பலம் யாழ். பொலிஸ் நிலையத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## கசூரினா கடலில் கொலை முயற்சி

### இருவர் கைது; இருவர் தப்பியோட்டம்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் கசூரினா கடலில் வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்டும் கொலை முயற்சி தொடர்பாக சந்தேகத்தின்பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவரைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

கசூரினாக் கடலில் தமது நண்பனை நீரில் அமிழ்த்தி கொலை செய்ய முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களை நேற்று முன்தினம் கைது செய்ததாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கடலினுள் அமிழ்த்தப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரான்ஸ் தேசிய தின நிகழ்வு கொழும்பில்


(கொழும்பு)

பிரான்ஸ் தேசிய நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

கொழும்பு சினமன் லேக் விடுதியில் நேற்று பிரான்ஸ் தேசிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும்

19 ஆம் பக்கம் பார்க்க



## கொழும்புடன் வர்த்தக உறவு நெதர்லாந்து அதிக ஆர்வம்

(கொழும்பு)

நெதர்லாந்து பிரதி வர்த்தக அமைச்சர் சிமொன் இம்டஸ் மற்றும் அவரது வர்த்தகக் குழுவினர் இலங்கையுடனான வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபட விருப்பம் தெரிவித்ததுடன், இலங்கையின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை கண்டு பொறாமையடைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பு வந்தடைந்த அமைச்சர் சிமொன் இம்டஸ் மற்றும் அவரது வர்த்தகக் குழுவினர் கிங்ஸ் பெறி ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இது பற்றி தெரிவித்த போது, இலங்கையின் துரித அபிவிருத்தியின் பொருட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## சமூக ஒருமைப்பாட்டுக்கான மத்தியநிலையம் இன்று திறப்பு

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு சமூக ஒருமைப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு வடமாகாணத்திற்கான மத்திய நிலையம் இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் அழைப்பின் பேரில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சின் வடமாகாணத்திற்கான மத்திய நிலையத்தினை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார திறந்து வைப்பார். (92)

## உள்ளூராட்சி சபைகளை தரமுயர்த்தல் கொழும்பில் இன்று ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு உட்பட நாட்டின் உள்ளூராட்சி சபைகளை தரமுயர்த்துவது தொடர்பான முக்கிய அபிவிருத்திக் கூட்டம் இன்று கொழும்பு மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவில் இடம்பெறும்.

பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்தல், பெரியளவிலான பரப்பளவினைக் கொண்ட பிரதேச சபைகளை இரு கூறாக பிரித்தல் மற்றும் ஏனைய இனங்காணப்படும் பிரதேச சபைகளை தரமுயர்த்துவது தொடர்பில் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா தலைமையில் இடம்பெறும்.

இம்மாநாட்டுக்காக வடக்கிலிருந்து 5 பிரதேச சபைகளின் செயலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ். குடாவில் பிரதேச சபைகளை நகரசபைகளாக முன்னகர்த்தும் திட்டம் 2000 ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்

19 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிறுவன் பலி விமானப்படை வீரர் கைது

(கொழும்பு)

மொரட்டுவை சாந்த மைக்கல் வீதிக்கு அண்மையில் இலங்கை விமானப்படை வீரருக்குச் சொந்தமான காரொன்று, ஏழு வயதான சிறுவன் மீது மோதியதில் அச்சிறுவன் மரணமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 5
புலமைப்பரிசில்
வினாத்தாள்

# மணவாளக் கோலம்

(வடமராட்சி)

கொற்றவத்தை அருள்மிகு ஆண்டாவளவு ஞானவைரவர் ஆலய வருடாந்த மணவாளக்கோலமும் பரிவார மூர்த்திகளுக்கான சங்காபிசேகமும் நாளை நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணியளவில் விசேட பூசைகளுடன் 108 சங்காபிசேக பூசைகள் ஆரம்பமாகி 11.00 மணியளவில் மூல மூர்த்தி பரிவார மூர்த்திகளுக்கான அபிசேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளதுடன் மதியம் ஆலயத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது.

இதனையடுத்து மாலை 6.30 மணியளவில் மூலமூர்த்தி பூசைகளுடன் இரவு 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், வைரவ மணவாளனின் திருவூஞ்சலும் இடம்பெற்று வைரவப்பெருமான் மணங்கமழ் பூக்களினால் அலங்கரிக்கப்பட்ட வீதியுலாவந்து அருள் பாலிப்பார். இதேவேளை இன்று மாலை 5.00 மணியளவில் விசேட புண்ணியதானம் கர்மாரம்பம் வாஸ்து சாந்தி என்பனவும் இடம்பெறவுள்ளன. (116)

கனரக வாகனங்களை மறித்து

# ஓமந்தை அரசமுறிப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(ஓமந்தை)

ஓமந்தை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அரசமுறிப்பு கிராமத்தில் பெரும்பாலானோர் விவசாயத்தையும் கூலித்தொழிலையும் நம்பி வாழும் கிராமத்தின் மத்தியில் கற்பாறைத்றொடர அமைந்துள்ளது.


இந்த கற்குவாறி வீதி, ஒப்பந்ததாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு செல்கின்ற பாரிய கனரக வாகனங்கள் கிராமத்தின் நடுவே சிறிய வீதியால் செல்கின்றன. வீதிகள் பழுதடைதல், அதிகாலை 5.00 மணிமுதல் ஓடத்தொடங்குவதால் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் சிரமங்கள் ஏற்படுதல், சிறிய மதகுகள் உடைதல், போன்ற பெரும் அசௌகரியங்களைக் கிராமமக்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கிராமமக்கள் பலதரப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அறிவித்தும் எந்தப் பலனும் கிடைக்காத காரணத்தாலேயே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (70)

# கடற்றொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## பருத்தித்துறை பிரதேச செயலர் புகழாரம்





(வடமராட்சி)

கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசின் கொள்கைத் திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பேருதவியாக இருக்கின்றது என பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு சுப்பர்மடம் பகுதியில் அமைச்சரின் தலைமையில், அண்மையில் இடம்பெற்ற வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது தலைமையின் கீழ் இப்பகுதியில் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக கடற்தொழிலை தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இம்மக்கள் நாளாந்தம் இந்திய மீனவர்களினதும், உள்ளூர் கடற்றொழிலாளர்களினதும் அத்துமீறிய மற்றும் தடைசெய்யப்பட்ட தொழிற்துறைகளால் பல்வேறுபட்ட பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். இவ்வாறான தொழில் பாதிப்புகள் மற்றும் தமது தேவைகளைச் சீர்செய்யும் முகமாகவும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணும் வகையிலும அமைச்சரின் கவனத்திற்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் கொண்டு செல்கின்றன.

இவ்வாறு கொண்டு செல்லப்படும் பிரச்சினைகள் தொடர்பில் அந்தந்த அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடிக் கேட்டறிந்து கொண்டு இம்மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், அரசின் கொள்கைத் திட்டங்களை நல்ல முறையில் முன்னெடுப்பதிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டங்களை வகுத்து அவற்றைச் சிறப்புற நடைமுறைப் படுத்தி வருகின்றார்.

இவ்வாறு ஒருங்கிணைந்த செயற்றிட்டங்களை சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு அமைச்சரது ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பேருதவியாக இருக்கிறது.

குறிப்பாகக் கடற்றொழிலாளர்களின் அத்தியாவசியமான தொழில்சார் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், வான் அகழ்வுப் பணிகள் எனப் பல்வேறு தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் ஏற்கனவே தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, வான் அகழ்வுப் பணிகளும் நடைபெற்றுள்ளன.

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் நட்பு நிலையம் திறப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நட்பு நிலையம் மாவட்ட அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது. நேற்றுக் காலை 10.00 மணியளவில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நட்பு நிலையத்தின் மூலம் குடும்ப வன்முறைகளை உளநல ஆற்றுப்படுத்தல் மூலம் குறைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் குடும்ப வன்முறைகளை குறைக்கும் வகையில் இந்த நிலையத்தின் மூலமாக தீர்வினை பெறுவதற்காகவே குறித்த நிலையம் மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்களிற்கு ஏற்படும் மன உளைச்சல், காயங்களை ஏற்படுத்துதல், தற்கொலை முயற்சி, விவாகரத்து போன்ற குடும்ப சிக்கல்களிற்கான உளநல சுகாதாரத்தின் மூலம் வன்முறைகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், குறித்த நிலையத்தால் முன்னெடுக்கப்பட்வுள்ளன. குடும்ங்களில் ஏற்படும் வன்முறைகள் தொடர்பாக கிளிநொச்சி வைத்தியசாலையின் நட்பு நிலையத்தில் முறையிட்டு மக்கள் பிரச்சினைகளிற்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என வைத்தியசாலைச் சமூகம் குறிப்பிட்டுள்ளது. (29)

## டெங்கு நோய் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் தென்படுவதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

இந்நோயின் தாக்கம் காரணமாக நேற்றைய தினம் மட்டும் 4 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுடன் இந்த மாதம் நேற்று வரை 27 பேரும், அந்த எணணிக்கை கடந்த தை மாதத்தில் இருந்து 395 பேராக இருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பா)

# விளக்கமறியல் உத்தரவு

இளவாலை, சுன்னாகம் மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளிற்குட்பட்ட பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளைத் திருடி வந்த சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று முன்தினம் மாலை நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்தியபோதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.



வடக்கு ஆளுநராக மீண்டும் பதவியேற்ற பின்னர் நடைபெற்ற சந்திப்பின் போது...


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2012/2013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2012/2013 இல் கலை, இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புகுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2012/2013 இற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Orientation Programme) பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும்.

| கற்கைநெறி | காலம் | இடம் |
|---|---|---|
| கலை | 21.07.2014 | காலை 9.00 மணி கைலாசபதி கலையரங்கம், (யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்கள் | 23.07.2014 | காலை 9.00 மணி இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம் |

மாணவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
14.07.2014. (C/3741)



சிறு விளம்பரங்கள்

டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088. (C/3395)

ஆட்டோ விற்பனைக்கு

பேக்கரி தேவைக்கு (நடமாடும் சேவைக்குரிய பொடி வேலையுடன்) பயன்படுத்தக் கூடிய SP AAD XXXX தொடரிடலக்கமுடைய அட்டோ விற்பனைக்குண்டு. (R/358)
தொடர்புக்கு: 0717337287

# உத்தமமாக செயற்படுவதன் மூலம் மக்களுக்கான சேவையை வழங்கமுடியும்

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை என்பன உத்தமமான (optimam level) மட்டத்தில் செயற்படுவதன் மூலம் மக்களுக்கான சேவையும் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாய் இருக்கும் என வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண உள்ளூராட்சி சபை தவிசாளர், செயலாளர்களுக்கான துணைவிதி மற்றும் ஈ இலத்திரனியல் அறிமுக அட்டை தொடர்பான பயிற்சிப் பட்டறை ஆசியா பவுண்டேசன் நிறுவன அனுசரணையுடன் இடம்பெற்றது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் மேலும் கூறுகையில்,

மக்களுக்கு சேவையாற்ற கூடிய உத்தமமான நிறுவனங்களான உள்ளூராட்சி சபைகள், வெளிப்படைத் தன்மையுடன் நல்லாட்சி சேவைகளை முன்னெடுத்தால் தேசம் மட்டுமல்ல மாகாண அரசும், மத்திய அரசும் நன்மை அடைவதுடன் இந்த நாடும் சுபீட்சம் அடையும்.



எனவே மக்களுக்கு அரச அலுவலர்களுடன் சபையின் தவிசாளர்களும் இணைந்த வகைகளில் உச்ச அளவு சேவையை வழங்க ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தினர் பல்வேறு தலைப்புக்களில் உதவுவதற்கு முன்வந்துள்ளனர். எனவே அவர்களின் அனுசரணையுடன் நாம் சிறந்த பயிற்சியைப் பெற்று பயனுள்ள சேவையை வழங்கலாம் என்றார்.

இந்நிகழ்வில் ஆசிய பவுண்டேசன் நிறுவன பணிப்பாளர் டாக்டர் ஏ.கோபக்குமார், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருவாகரன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் சாந்தசீலன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்சீல், உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ பவுண்டேசன் உதவிப் பணிப்பாளர் ஏ.சுபாகரன் ஆகியோர் உரையாற்றினர். (92)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் ஆர்.ஈஸ்வரதாஸன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது. (48)

# கரவெட்டி விக்னேஸ்வரா வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியிலிருந்து சம்பந்தர் கடைவரை செல்லும் வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் இதனூடாக பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குரிய குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கென பிரதேசசபை உறுப்பினர்கள் பார்வையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் புனரமைக்கப்படாதுள்ள இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரசஅலுவலர்கள் எனப்பலர் செல்கின்ற நிலையில் குறித்த வீதியை விரைவில் புனரமைப்பு செய்வது அவசியமானது.

எனவே இவ்வீதியை புனரமைப்பு செய்து போக்குவரத்தை இலகு படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# ஏ.ரி.எம் சேவை இல்லை சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(மன்னார்)

மன்னார் நகரப்பகுதியில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பேசாலை கிராமத்தில் ஏ.ரி.எம் சேவை இல்லாமையால் உடனடிப்பணத்தேவைகளுக்கு தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்திலும் அதனை அண்டிய கிராமங்களிலும் வங்கிச் சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் விடுமுறை நாட்களிலும், போயா தினங்களிலும் வங்கிச்சேவை இன்மையால் உடனடிப் பணத் தேவைகளுக்கு ஏ.ரி.எம்.சேவை இல்லாது சிரமப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது தொடர்பாக வங்கிகளின் முகாமையாளர்களிடம் தெரியப் படுத்தியுள்ளதாகவும் மக்கள் தேவையைக் கருத்தில் கொண்டு ஏ.ரி.எம். சேவையை ஏற்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# "செல்வாக்கு" பார்த்துச் செய்கிறாராம் கல்வி அமைச்சர்!






'பெரிய இடத்துச் சங்கதிகளை அறியோணும் எண்டால் நீங்கள் எப்பவும் அங்க இருக்கிற சின்ன ஆக்களோடு சினேகிதம் வையுங்கோ' எண்டு சொல்லுவினம்.

சின்ன ஆக்கள் எண்டால், பெரிய இடங்களில இருக்கிற சின்ன உத்தியோகம் பாக்கிற ஆட்கள். இவைக்குத் தெரியாத சங்கதிகள் எண்டு ஒண்டுமில்லை.

மாகாணசபையின்ரை கல்வி அமைச்சரோட இருக்கிற சின்ன ஆக்களோட அப்பிடியொரு. சினேகிதம் நமக்கும் வாய்ச்சிருக்கு.

இந்த அமைச்சர் முந்தி உத்தியோகம் பாக்கேக்க, அவருக்காக கந்தோரில வேவு பார்த்த ஆள் ஒண்டையும் கை காலுக்கு அடக்கமாக இருந்த இரண்டு மூண்டு பேரையும் தனக்குத் தோதாகச் சின்ன உத்தியோகம் பாக்க எண்டும் தொண்டு செய்ய எண்டும் கொண்டு திரிகிறார்.

ஆனால், இந்தச் சின்ன ஆட்கள் எப்பவும் சின்ன ஆட்களாக இருப்பினமோ...!

சின்னப் புலி ஒரு நாள் பெரிய புலி ஆகிறதைப்போல இவையும் அமைச்சர் ரேஞ்சுக்கு தலைப்பாகையைக் கட்ட வெளிக்கிட்டிருக்கினம்.

அண்டைக்கொருநாள் இப்பிடித்தான் இதில ஒரு 'தலைப்பாகை'யோட கதைச்சுக்கொண்டிருந்தன்.

அவர் சொன்னார், 'கல்வி அமைச்சர்தான் கிளிநொச்சி மாவட்டத்தில இருக்கிற முரசு மோட்டைப் பள்ளிக்கூடத்துக்கும் கிளிநொச்சி நகரத்தில இருக்கிற புனித தெரேசா பெண்கள் கல்லூரிக்கும் தலா மூண்டு ஆசிரிய விடுதிகளைக் கட்டிக்குடுத்திருக்கிறார்' எண்டு.

இப்பிடிச் சொல்லிப்போட்டு, கொஞ்ச நேரத்தில இன்னொரு சங்கதியையும் மெல்லமாக் காதுக்குள்ள குசுகுசுத்தார். 'இந்தக் குவார்ட்டஸ்களில ஒருத்தனும் தங்கப்போறதில்லை. ஏ9க்குப் பக்கத்தில – அதுவும் கிளிநொச்சி நகரத்தில குவார்ட்டஸ்ஸைக் கட்டினால். ஆர்தான் நிப்பினம்? இதைப்போலத்தான் முரசுமோட்டைக் குவார்ட்டஸ்களிலயும் ஒரு பிள்ளை நிக்காது' எண்டார்.

'அப்பிடியெண்டால் ஏன் இதைக் கட்டினவை?' எண்டு கேட்டன்.

அவர் சொன்னார் – 'எல்லாம் செல்வாக்கில செய்த வேலையள்தான். முந்தி இவர் கல்வி அதிகாரியாக இருக்கேக்க இந்தக் குவார்ட்டஸ்களுக்குச் சிபாரிசு செய்திருந்தார். ஓய்வு பெற்றாப்பிறகுதான் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து விடுதிகள் கட்டப்பட்டன. தனக்குப் பிடிச்ச ஆக்களின்ரை பள்ளிக்கூடங்கள் எண்டு பார்த்தாரே தவிர, தேவையான பள்ளிக்கூடங்கள் எண்டு பாக்கேல்ல. இதைப்பற்றி நாங்கள் கதைக்கேலாது. எண்டாலும் இது ஒரு சரியில்லாத வேலை...' எண்டு கவலைப்பட்டார் அந்தத் 'தலைப்பாகை.'

'அப்ப எங்க இதுகளைக் கட்டியிருக்கோணும்?' எண்டு கேட்டன்.

'அங்க கிளிநொச்சி மாவட்டத்தின்ரை உள் பக்கங்களில கனக்கப் பள்ளிக்கூடங்களுக்குத்தான் இந்தத் தேவைகளெல்லாம் இருக்கு. இதில ஒண்டை புன்னைநீராவியிலயோ இல்லையெண்டால், பிரமந்தனாறுப் பக்கத்திலயோ கட்டியிருக்கலாம். அதைப்போல மற்றதை முறிப்பிலயோ கோணாவிலிலயோ கட்டியிருக்கலாம். அப்பிடிக் கட்டியிருந்தால் அதால நல்ல பிரயோசனம் இருக்கும்' எண்டார் அந்தப் பார்த்த'சாரதி'.

'ஏன், இதுகளையெல்லாம் அங்க இருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கவனிக்கிறதில்லையோ! அவர்தானே அங்க கனவிசயங்களை முன்னுக்கு நிண்டு செய்யிறார். அப்பிடியெண்டால், இதுகளை அனுமதிச்சதில அவருக்கும் பங்கிருக்குத்தானே!' எண்டு என்ர கேள்வியைத் தூக்கிப்போட்டன்.

'அவரும் இருக்கிறார்தான். ஆனால், அவரைச் சுழிச்சுக்கொண்டே அங்க ரகசியமாக் காரியம் பாக்கிற ஆக்கள் இருக்கினம். பூநகரியில ஒரு பெரிய பள்ளிக்கூடத்தைக் கட்டியிருக்கினம். சொன்னால் நம்பமாட்டீங்கள், அங்க இருக்கிற பிள்ளையளின்ரை தொகை 49 தான். பள்ளிக்கூடத்துக்குச் செலவழிச்ச காசு 90 மில்லியனாம். இப்பிடித்தான் சனங்கள் இருக்கிற பக்கத்தில றோட்டுகள் திருத்தேல்ல. சனங்கள் இல்லாத காட்டுப்பாதைகள் எல்லாம் கொங்கிறீற் றோட்டாகியிருக்கு... எல்லாம் செல்வாக்குத்தான்....' எண்டு இன்னும் ஏராளம் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார் தலைப்பாகை.

சின்ன ஆளெண்டாலும் பெரிய இடத்துச் சங்கதிகள், பெரிய இடத்தின்ரை உள்விசயங்கள் எல்லாத்தையும் அக்கு வேற ஆணி வேறயாகத் தெரிஞ்சு வைச்சிருக்கிறார்.

என்ன செய்யிறது, எந்தக் காலத்திலயும் 'நெருப்புக்குள்ளால நெய்யைக்கொண்டு போற ஒரு கோஷ்டி இருக்கும்.' அந்தக் கோஷ்டிக்கு இனிப்புக்குடுக்கிற இந்த மாதிரி அதிகாரிகளும் அமைச்சர்களும் இருப்பினம்தான்.'

தமிழீழம் கிடைக்கிறதுக்கு முதலே இப்பிடியெல்லாம் எண்டால், தமிழீழம் கிடைச்சாப்பிறகு எப்பிடியிருக்கும்?

சிரிப்பாயும் இனிப்பாயும் பேசிப்பறைஞ்சு அலுவல் பாக்கிறதுக்கும் ஒரு கெட்டித்தனம் வேணும் பாருங்கோ.

முதலமைச்சர் சொல்லிறார், பிரதேச வேறுபாடு தனிநபர் செல்வாக்கு எல்லாம் தன்னுடைய புனித ஆட்சியில் கிடையாது எண்டு. இவர் சொல்லிறார் 'தில்லாலங்கடி எண்டு உள்கூத்தெல்லாம் அந்த மாதிரி நடக்குது' எண்டு. இதில எது உண்மையப்பா?

எப்பவும் சின்ன ஆட்கள் பொய்சொல்லிறது குறைவு எண்டபடியால... அந்தப் பார்த்த'சாரதி சொல்லிறதுதான் சரிபோலப் படுகுது....

மனிதகுல முன்னேற்றத்திற்காக மனிதன் உழைக்கிற இடமே உயர்ந்த கோயில். - ஸ்டிலி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வஞ்சனை சொல்வாரடி கிளியே...

"அமிர்தலிங்கத்தின் மறைவு தமிழர்களுக்கும் தமிழர் போராட்டத்திற்கும் பெரும் இழப்பாகும். அமிர்தலிங்கத்தின் கொலையை அன்று கண்டித்திருந்தால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற காரணத்தினாலேயே தமிழ் அரசியல் தரப்பில் அவரது இழப்பு குறித்து மௌனம் நிலவியது. ஆனால் அந்த மௌனத்திலிருந்து அமிர்தலிங்கத்தின் பெறுமதியை தமிழ் மக்கள் அல்லது அவரின் அரசியல் சகோதரர்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்று கூற முடியாது.

அமிர்தலிங்கம் அண்ணனின் காலத்திலேயே தமிழீழம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்திலிருந்து நாங்கள் மாறியிருந்தோம்" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பிபிசி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேட்டியை கவனமாகச் செவிமடுத்தவர்களுக்கு, கூட்டமைப்பின் தலைவர் எவ்வாறு மக்களைச் சுத்துகிறார் என்பது கட்டாயம் புரிந்திருக்கும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் கொலையை அன்று (1989–ல்) கண்டித்திருந்தால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் இன்று சொல்வதன் மூலம் என்ன கூற வருகிறார் என்பது தெளிவு.

அன்று கண்டித்திருந்தால், அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்கள்–அதாவது விடுதலைப் புலிகள்–அவ்வாறு கண்டிப்பவர்களையும் அன்று கொலைசெய்து விடுவார்கள் என்ற பயத்தின் காரணமாகவே அமிர்தலிங்கத்தின் கொலை குறித்து தாங்கள் மௌனமாய் இருந்ததாய்ச் சொல்கிறார் கூட்டமைப்பின் தலைவர்.

அது உண்மை அல்ல. பாராளுமன்றக் கதிரைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கள்ள மௌனம் தான் அதுவே தவிர அச்சத்தினால் இவர்கள் கண்டிக்காமல் இருந்துவிடவில்லை.

புலிகள் கொன்றுவிடுவார்கள் என்ற பயம் கிஞ்சித்தும் இல்லாத இப்போதும் கூட, அந்தக் கொலைகளுக்காக புலிகளைக் கண்டிக்கிறோம் என்று ஒரு வார்த்தை இவர்களால் சொல்ல முடியாமல் இருப்பதிலிருந்து, வாக்குகளையும் அதன்மூலம் கிடைக்கும் பதவிகளையும் உத்தேசித்த கள்ள மௌனம்தான் இவர்கள் காக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அமிர்தலிங்கத்தின் பெறுமதியை இவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதும், அந்தக் கொலையை கண்டிக்க விரும்பினார்கள் ஆனால் பயத்தினால் மௌனமாயிருந்தார்கள் என்று சொல்வதும் உண்மையானால், அவர்கள் எடுத்துத் தரும் பாராளுமன்றப் பதவிகளைப் பெறுவதற்காக, அமிர்தலிங்கத்தின் கொலையாளிகளாக இவர்கள் அறிந்திருந்தவர்களின் அலுவலக வாங்குகளில் மணித்தியாலக் கணக்காக எப்படிப் போய்க் காத்திருக்க முடிந்தது?

"அமிர்தலிங்கம் அண்ணனின் காலத்திலேயே தமிழீழம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்திலிருந்து நாங்கள் மாறியிருந்தோம்" என்று சொல்கிறவர்கள், அவரைக் கொலை செய்தவர்களைக் கண்டிப்பதற்கு விரும்பியிருந்தவர்கள், ஆனால் தமிழீழத்திற்காகப் போராடிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு பாராளுமன்றம் சென்றுவிட நினைத்தது எப்படி?

அமிர்தலிங்கத்தைக் கொன்றால் என்ன, யாரைக் கொன்றால் என்ன... கொன்றவர்களால் தேர்தலில் வெல்ல வாக்குகள் கிடைக்குமென்றால், கண்டிக்காமல் கமுக்கமாக இருந்துவிடும், நேர்மையற்ற சந்தர்ப்பவாதத் தலைமைகள்தான் இவர்கள்.

வாக்குகள் பெறவேண்டுமானால் தேர்தல் மேடைகளில் அவர்களை மாவீரர்கள் என்றும் புகழ் பாடுவார்கள்; கொல்லப்பட்ட அமிர்தலிங்கத்தின் பெறுமதியை நாங்கள் உணர்ந்திருந்தோம் என்றும் நாத்தழுதழுக்க கதைவிடுவார்கள்.

நேர்மை சிறிதுமற்ற இந்த நடிப்புச் சுதேசிகளை அறுபத்தைந்து வருட காலத்திற்கும் மேலாக, ஏமாற்றைப் புரிந்துகொள்ளாமல் தமிழ்ச் சமூகம் உணர்ச்சியாவேசத்துடன் பின்தொடர்வதுதான் அதன் தலைவிதி!

- ஆசிரியர்

# இலங்கை – ஜப்பான் நாடாளுமன்ற லீக்

# மாத இறுதியில் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கை - ஜப்பான் நாடாளுமன்ற லீக் உறுப்பினர்கள் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற லீக் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னகொடவைச் சந்தித்து உரையாற்றியபோதே அவர்களது விஜயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ள இக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளனர். மேலும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர ஆகியோரையும் இக்குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

ஜப்பான் பிரதிநிதிகள் குழுவிற்கு அந்நாட்டு நாடாளுமன்ற லீக்கின் தலைவரும் ஆளும் முற்போக்கு ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதியும் முன்னாள் வெளி விவகார அமைச்சருமான மஷிக்கோ கொமுரா, செயலாளர் நாயகம் யுக்கோ ஒபியுச்சி, முன்னாள் நாடாளுமன்ற அமைச்சரும் சிரேஷ்ட நிதித்திட்டமிடல் அமைச்சர் உட்பட 12 அரசியல் தலைவர்கள் இக்குழுவில் அடங்குகின்றனர்.

ஆளும் முற்போக்கு கட்சி மற்றும் ஏனைய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 67 உறுப்பினர்கள் ஜப்பான்- இலங்கை நாடாளுமன்ற லீக்கில் அங்கம் வகிக்கின்றனர். இலங்கை-ஜப்பான் நாடாளுமன்ற லீக்கின் தலைவராக சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் பதவி வகிக்கிறார்.

12 வருடங்களுக்குப் பின்னர் லீக் இலங்கை வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இருநாடுகளுக்கிடையிலான உறவை மேலும் பலப்படுத்தக்கூடியதாக இவ் விஜயம் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையருக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

கொரியாவில் தொழில் செய்யும் இலங்கையர்களுக்கு ஓய்வூதிய முறையொன்றை தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை சமூக பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் கொரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருவதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சுமனா ஆரியதாஸ குறிப்பிட்டார்.

கொரியா மாத்திரமின்றி, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் இலங்கைப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் முறையொன்று தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## தேர்தல்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவில்லை – சாடுகிறது ஐ.தே.க. –

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் தேர்தல்கள் தொடர்பில் எந்தத் தகவலையும் மக்களுக்கு தெளிவுபடுத்தாமைக்கு காரணம் அரசாங்கம் நிலையில்லாமல் இருப்பதே ஆகும் என ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாரிடமாவது எப்போது பொதுத்தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போகிறது என்று கேட்டால் யாருக்கும் தெரியாது.

இவ்வாறான நிர்வாக முறையே இந்த நாட்டில் காணப்படுகின்றது. ஜனநாயக நாட்டில் இவ்வாறான நிலைமை இருக்க முடியாது என்றார்.

# உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர் தாதியர்கள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் செயற்குழு உள்ளிட்ட 21 தொழிற்சங்கங்கள் நேற்று மதியம் 12 மணிமுதல் சாகும் வரையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சம்பளக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட 5 கோரிககைகளை முன்வைத்து இந்த உணவு தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க இணைப்பாளர் டி.எச். சோமரத்ன தெரிவித்தார்.

முதற் கட்டமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம் ஏனைய வைத்தியசாலைகளிலும் முன்னெடுக் கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இந்தப் போராட்டம் தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப் பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

# வவுனியாவில் சுகாதார தொழிலாளர்கள் காலவரையறையின்றி பணிப்பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் காலவரையறையற்ற பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மீண்டும் நகரசபை முன்றலில் நேற்று முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதாகவும் இதன்போது, கடந்த 11ஆம் திகதிக்குள் 3 பேர் கொண்ட விசாரணைக்குழு அமைத்து நியமனங்கள் தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்திருந்தார்.

எனினும், இதுவரை அக்குழு நியமிக்கப்படவில்லை. தமது கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை எனக் கூறி இவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இப்போராட்டத்தில், வவுனியா நகரசபையில் பணியாற்றும் அனைத்து சுகாதாரத் தொழிலாளர்களும் நியமனம் கிடைக்காத சாரதிகளும் பங்குபற்றியுள்ளனர்.

வவுனியா நகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுகாதாரத் தொழிலாளர்களில 7 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆளணி அதிகரிக்கப்பட வேண்டும், வவுனியா நகரசபையால் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட காவல் கடமை பதவிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், உள்ளக வெற்றிடங்கள் உள்ளகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும், 30 வருடங்களாக பணியாற்றுபவர்களுக்கு இதுவரையில் தரம் உயர்வு வழங்கப்படாமையால் அரச சுற்றுநிருபம் 01- 2001 இற்கு அமைய தரம் உயர்வு வழங்கப்பட வேண்டும், வேறு திணைக்களங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேணடும்.

தொழிலாளர்களுக்கு சாப்பாட்டறை கட்டிக் கொடுக்கப்படவேண்டும். தொழிலாளர்களுக்கான மலசலகூடம் புனரமைப்பு செய்து தரப்பட வேண்டும். அந்தந்த இடங்களில் பணிபுரிபவர்கள் அங்கேயே பணி புரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். சுகாதார பகுதி நலன்புரிச்சங்கத்துக்கு நகரசபையால் சலுகைகள் வழங்கப்பட வேண்டும், உமா எனப்படும் சுகாதார தொழிலாளியை தொழிலாளிகளுடன் பணியாற்ற அனுமதிக்க வேண்டும், வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்பட வேண்டும் என்ற 12 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 30 ஆம் திகதி வவுனியா நகர சபை சிற்றூழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


தமிழ் மக்கள் ஆணை வழங்கினால்
படைகளை படிப்படியாக அகற்றுவோம்
உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
22 09 2013
மலர்ந்தது
தமிழர் அரசு
மாகாண அதிகாரம் முழுவதும்
வடக்கில் நிலை நாட்டப்படும்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

# வடக்கு மாகாணசபை இதுவரை சாதித்தது என்ன?

**வே.அர்ச்சுணன்**

**மாகாண சபையை சரியாக வழிநடத்திச் சென்றால் தற்போதிருக்கும் முப்பத்தேழு சட்டவாக்கும் பிரிவுகளைப் பயன்படுத்தி, மாகாண சபையால் மக்களுக்கு செய்யவேண்டிய பணிகளை – மக்களுடைய அடிப்படைத் தேவைகளில் கூடுதலானவற்றை – செய்து முடிக்க முடியும். ஆனால் மாகாண சபைச் செயற்பாட்டிற்கு அரசு உதவவில்லை, ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்றவாறு ஊடகங்களுக்கு கருத்துக்களைக் கூறிக்கொண்டு மறுபுறத்தில் மாகாண சபை ஊடாக தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கக் கூடிய அனுகூலங்களைப் பெறுவதிலேயே அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பெரியளவில் நாட்டம் காட்டி வருகின்றனர்.**

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தடல் புடலாக களத்தில் இறங்கியவர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டதுடன் பல்வேறு வாக்குறுதிகளையும் முன்வைத்தனர். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் மக்கள்முன் வைத்த வாக்குறுதிகளையும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் மறந்தவர்களாகி விட்டனர்.

வடக்கு மாகாண சபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன்வசப்படுத்திக் கொண்டதை அடுத்து அவர்களது உசுப்பேற்றும் பத்திரிகை, “மலர்ந்தது தமிழர் அரசு” என்று தனது தலைப்புச் செய்தியை வெளியிட்டிருந்தது. அதே பத்திரிகை மூன்று மாதங்கள் கழித்து மாகாண சபையால் எதையும் சாதிக்க முடியாது என்ற சாரப்பட செய்தி வெளியிட்டு மக்களை அதை மறக்கச் சொன்னது.

மாகாண சபையால் எதையுமே சாதிக்க முடியாது என்று முன்பே தெரிந்திருந்தால், எதற்காக மாகாணத்து “தமிழ் அரசை”ப் பிடிக்க வாக்குகளைக் கேட்க வேண்டும்? அதை எடுத்து மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மைகளைச் செய்யக் கூடியவர் களைச் செய்யவிடாமல் வைக்கல் பட்டடையில் படுத்திருப்பது போல் ஏன் அங்கு குந்தியிருக்க வேண்டும்? மக்களுக்கு எந்த

**மாகாண சபையினுடைய அதிகார வரம்பு 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணசபை நிரலில் 37 விடயங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த 37 விடயங்கள் தவிர்ந்த புறம்பான விடயங்களில் தான் நிறைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சம்பந்தமில்லாத விடயங்களில் தீர்மானம் எடுத்தால் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும்?**

நன்மையும் கிடைக்க விடாமல் தடுப்பதற்குத்தான் மலர்ந்ததா தமிழர் அரசு?

முன்பே எல்லாவற்றையும் நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டு மக்களை உசுப்பேற்றும் அரச எதிர்ப்பைப் பேசியே மக்களை ஏமாற்றி மகாகாண சபையைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இன்னும் எத்தனை வருடங்களுக்குத்தான் வைக்கல் பட்டடையில் தாங்களே ஏறிச் சும்மா படுத்திருந்தபடி அரசியல் சுகம் காணப் போகிறார்கள்?

மாகாண சபையை சரியாக வழி நடத்திச் சென்றால், தற்போதிருக்கும் முப்பத்தேழு சட்டவாக்கும் பிரிவு- களைப் பயன்படுத்தி, மாகாண சபையால் மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை - மக்களுடைய அடிப்படைத் தேவை- களில் கூடுதலானவற்றை - செய்து முடிக்க முடியும்.

ஆனால் மாகாண சபைச் செயற்பாட்டிற்கு அரசு உதவவில்லை, ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்றவாறு ஊடகங்களுக்கு கருத்துக்களைக் கூறிக் கொண்டு மறுபுறத்தில் மாகாண சபை ஊடாக தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கக் கூடிய அனுகூலங்களைப்பெறுவதிலேயே அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பெரியளவில் நாட்டம் காட்டி வருகின்றனர்.

தங்களிற்கு சொகுசு வாகனம், பொலிஸ்பாதுகாப்பு, வெளிநாட்டு சுற்றுலா, உறவினர்களுக்கு வெளி நாட்டுத் தூதரகங்களில் பதவிகள், மகன் மகள்மாருக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் படிப்புகள் என தங்களுக்குரிய அனைத்து வசதி- களையும் பெறுவதில் மாகாண அமைச்சர்களும் தலைவர்களும் முண்டியடித்து பெரும் போட்டியே நடத்தி வருகின்றனர்.

கல்விக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட் டுள்ள மாகாண அமைச்சர் தனது அந்தரங்க செயலாளர் முதல் தனது அலுவலக தனிப்பட்ட உதவியாளர்கள் வரை கண்கவரக்கூடிய இளம் நங்கைகளைத் தேர்ந்தெடுப்பதில் வல்ல வராக இருப்பதாக மாகாண சபை உறுப்பினர்கள் சிலரே முணுமுணுக் கின்றனர். ஏற்கனவே கல்வித் திணைக்களத்தில் இருந்த காலப் பகுதியிலும், இவர் இத்தகு “பேர் பெற்றவராக” இருந்ததாக கூறப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே “இந்த விஷயத் தில்” கைதேர்ந்தவராக முன்னாள் பாடசாலை அதிபரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமானவர் பேரெடுத்திருக்கின்ற போதிலும் அவரை சைற் எடுக்கும் அளவிற்கு மாகாண அமைச்சர் தனது நகர்வுகளில் அதி திறமை காட்டுவதாக அந்த உறுப்பினர்கள் வியப்பு வெளியிடு கின்றனர்.

எப்படியோ... யாராவது எதையாவது அனுபவித்துவிட்டுப் போகட்டும் ஆனால் மக்களிற்கு செய்யக்கூடிய அபிவிருத்திகளைச் செய்யாமல் அசமந்தப்போக்காக இருந்து அந்த நிதியை திரும்பத் திறைசேரிக்கு அனுப்புகின்ற வகையிலேயே இவர்களது செயற்பாடுகள் இருக்குமாக இருந்தால் அது மக்களுக்கு செய்கின்ற பாரிய துரோகம்.

மாகாண சபை உறுப்பினர்களுக்கும் மாகாண அமைச்சர்களுக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை மக்கள் நலத்திட்டத்திற்கு சரிவர பயன் படுத்துவதுடன், வீதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றை சீராக மேற் கொள்வதற்கு சரியான பொறிமுறை களைக் கையாளவேண்டும். மாகாண அரசு உருவாக்கப்பட்டு பல மாதங்கள் கழிந்துள்ள போதிலும் மக்கள் நலத்திட்டங்கள் என்று உருப்படியாக எதுவும் நடந்ததாக இல்லை.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உள்ளிட்ட உள்ளகப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள வீதிகளின் நிலைமையை பார்த்தால் மாகாண சபையின் செயற்பாடுகள் விளங்கும். யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதிகளுக்குச் சென்றால் வடக்கில் ஒரு மாகாண சபை இருக்கிறதா? செயற்படுகிறதா? என்றே எண்ணத் தோன்றும்.

பருத்தித்துறையில் இருந்து மருதங் கேணிக்குச் செல்லும் வீதியில் சென்று பார்த்தால் மாகாண சபையின் சீத்துவம் மேன்மேலும் விளங்கும். வீதிகள் மட்டுமல்ல, வேறெந்த குறைகளைச் சொல்லிக் கேட்டாலும், பதிலாக அரச எதிர்ப்புப் புராணத்தைக் கேட்டுவிட்டு கோபத்தை மடைமாற்றித் திரும்ப வேண்டியதுதான் மக்கள்!

தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் இந்த மாகாண சபை அமைச்சர்களை தாங்கள் கண்டதாகவும், அதன்பின்னர் இவர்களைத் தாங்கள் காணவே இல்லை எனவும், மாகாணத் தேர்தலில் இவர்களுக்கு வாக்குப் போட்டது ஜெனீவா போய்ப் போர்க்குற்ற விசாரணை அலுவல்களைக் கவனித்துக் கொள்ளத்தானா என்றும் காரைநகர் உள்ளிட்ட தீவக மக்களும் மருதங்கேணி மக்களும் கவலையுடன் புலம்புகின்றனர்.

மாகாண சபையில் எண்ணுக்கணக்கான தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்ற போதிலும், அந்தத் தீர்மானங்கள் யாவும் பயனற்றவை என மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் கவலைபட கருத்து வெளியிடுகின்ற அளவிற்கு மாகாண சபையை நடத்து கின்ற மகத்துவம் அமைந்துள்ளது.

வடமாகாண சபையினால் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் எல்லாம் அரசியல் உரிமை சார்ந்ததாகவும், சர்வதேசம் சார்ந்ததாகவும், மத்திய அரசின் அரச திணைக்களங்களுக்குச் சம்பந்தப்பட்டவையாகவும் இருக்கின் றனவே தவிர, மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய தீர்மானங்களை எடுக்க கூட்டமைப்பினர் எண்ணுவதில்லை. எனவேதான், நூற் றுக்கணக்கான தீர்மானங்களை நிறை வேற்றினாலும், அவை பயனற்றவை யாகவே இருக்கின்றன என்று தெரிவிக்கிறார் சீ.வி.கே.சிவஞானம்.

இதேவேளை வடக்கு மாகாண சபை யில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங் களில் 90 வீதமானவை மாகாண சபையின் அதிகார வரம்பை மீறியவை யாக காணப்படுவதாக மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சீ.தவராசா குற்றம் சுமத்துகிறார்.

மாகாண சபையினுடைய அதிகார வரம்பு 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணசபை நிரலில் 37 விடயங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த 37 விடயங்கள் தவிர்ந்த புறம்பான விடயங்களில் தான் நிறைய தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சம்பந்தமில்லாத விடயங்களில் தீர்மானம் எடுத்தால் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும். இது ஒரு முடியாத காரியம்.

வடமாகாண சபையினால் செய்ய வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எங்களுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களை மாகாண சபை யின் அதிகாரங்களாக மாற்றுவதற்கு அவை நியதிச் சட்டங்களாக்கப்பட வேண்டும். இதுவரை ஒரு நியதிச் சட்டம் கூட உருவாக்கப்படவில்லை. ஒரே ஒரு நியதிச் சட்டம்தான் இப்போது தயாராகும் நிலையில் உள்ளது என்று மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

வடமாகாண சபையானது மக்களுக்கு தன்னால் ஆற்றக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட தனது சட்ட வரையறைக்கு உட்பட்ட சேவைகளை சீராக ஆற்றுமேயானால் மாகாண சபை ஊடாக யுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வட பகுதி மக்கள் நன்மை அடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

மாறாக மாகாண சபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்களது சுகபோகங் களுக்கும் தனிப்பட்ட தேவைகளுக்கும் மாகாண சபையையும், மத்திய அரசையும் பயன்படுத்திக்கொண்டு, மாகாண சபை ஊடாக எதையுமே சாதிக்க முடியாது போதிய அதிகாரங் கள் இல்லை, நிதி வளம் இல்லை, பொலிஸ் அதிகாரம் இல்லை, காணி அதிகாரம் இல்லை என்ற நொண்டிச் சாட்டுகளைக் கூறி மக்களுக்குரிய வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களை முடக்குவது என்பது மக்களுக்குச் செய்கின்ற பாரிய துரோகம் ஆகும்.

தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் வாகன இறக்குமதிக்குரிய நிதியை எந்தவொரு மாகாண சபை அமைச்சராவது மக்களின் நலத் திட்டத்திற்கு மனமுவந்து திருப்பு வாராக இருந்தால், அவரே மக்கள் சேவகனாக மதிக்கப்படுவார்.

ஒட்டுமொத்தத்தில் மாகாண சபையானது சரியாக செயற்படுமாக இருந்தால் யுத்தத்தில் நொந்துபோன எமது மக்களுக்கு ஒத்தடம் போடுவதுடன், பலவருடங்கள் பின்தள்ளியிருக்கும் வாழ்நிலையையும் முன்னுக்கு கொண்டுவந்துவிட முடியும். தாமதம் ஆக ஆக, மேலும் பின்னோக்கித்தான் நமது சமூகமும், உரிமைகளும் விடுபட்டுச் செல்லும்.

# அளுத்கம சம்பவங்களை சர்வதேச மயப்படுத்தாதீர்

## முஸ்லிம் சமூகத்திடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

அளுத்கம சம்பவங்களை சர்வதேச மயப்படுத்த வேண்டாம் என அரசாங்கம் முஸ்லிம் சமூகத்திடம் வலியுறுத்தியுள்ளது. இலங்கை முஸ்லிம் பேரவையுடன நடைபெற்ற சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அளுத்கம சம்பவம் ஒரு துரதிஷ்டவசமான சம்பவம் எனவும் குறுகிய நோக்க நலன்களை எதிர்ப்பார்க்கும் நபர்கள் அந்த சம்பவத்தை ஊதி பெருப்பித்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர் இலங்கையர்கள் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகளைப் போன்ற விளைவுகள் ஏற்படக் கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம வன்முறை சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் கடந்த மாதம் ஜெனிவாவில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் முஸ்லிம் பேரவை அமைச்சரிடம் விளக்கம் பெற முயற்சித்தது.

அளுத்கம வன்முறைகளுக்கு இலங்கையின் முஸ்லிம் சமூகத்தின் தவறே காரணம் என ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மனிஷா குணசேகர தெரிவித்திருந்தாக இலங்கை முஸ்லிம் பேரவை குறிப்பிட்டது.

# கடுங்காற்று காரணமாக 736 பேர் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட அனர்த்தங்களில் 736 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன், 893 குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, நிலவுகின்ற காற்றுடன் கூடிய அசாதாரண கால நிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் வெலிமடை மற்றும் ஹல்தமுல்லை கல்வி வலயங்களின் பாடசாலைகள் நேற்றும் மூடப்பட்டதாக ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

# எரிபொருள் குழாய் கட்டமைப்பின் திருத்தப் பணிகள் நிறைவு

(கொழும்பு)


சேதமடைந்திருந்த குழாய் கட்டமைப்பின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் தெரிவிக்கின்றது.

கப்பலில் இருந்து எரிபொருள் இறக்கும் குழாய் கட்டமைப்பில் சேதம் ஏற்பட்டிருந்ததால் கடந்த 25 ஆம் திகதிமுதல் எரிபொருளை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

திருத்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால் எரிபொருளை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த டி சில்வா கூறினார்.

எவ்வாறாயினும், கப்பலில் இருந்து எரிபொருளை இறக்குவதற்கு பயன்படுத்தும் குழாய் கட்டமைப்பானது 12 வருடங்களுக்கும் அதிககாலம் பழைமையானது என தேசிய ஊழியர் சங்கத்தின் எரிபொருள் தொடர்பான கிளையின் செயலாளர் ஆனந்த பாலித்த குறிப்பிட்டார்.

இதேவேளை, சப்புகஸ்கந்த



எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் நீல் ஜயசேகர தெரிவித்தார்.

# அரசாங்கத்திற்கு விரோதமாக 200 இணைய தளங்கள்

## குற்றம் சுமத்துகிறார் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு விரோதமான 200 இணைய தளங்கள் இயங்கி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினர் இத்தகைய இணைய தளங்களை இயக்கி வருவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

யட்டிநுவர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதுதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு, அரசிற்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துக்களை நிறுவும் நோக்கில் இந்த



இணைய தளங்கள் இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசுக்கு சேறு பூசும் நோக்கிலும் இந்த இணைய தளங்கள் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். எதிர்கால தேரதல்களை இலக்கு வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு இணையங்களின் ஊடாக சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி முறைமையை ஐக்கிய தேசிய கட்சியால் மட்டுமே இல்லாமல் செய்ய முடியும்

(கொழும்பு)




நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே இல்லாமல் செய்ய முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த தமது கட்சி தயாராவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபம் - தங்கொட்டுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# மக்களுக்கு முன்னுதாரணமாக அரசியல்வாதிகள் திகழவேண்டும் என்கிறார் மேர்வின்



(கொழும்பு)

அரசியல்வாதிகள் மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டுமென அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். அண்மையில் இரண்டு அரசியல்வாதிகள் தொலைக்காட்சி விவாதமொன்றில் ஒருவரை ஒருவர் கடித்துக்கொண்டனர். இவ்வாறு கடித்துக் கொள்வது மிருகங்களுக்கு வேண்டுமானால் பொருததமாக இருக்கும். மனிதர்களுக்கு இது பொருத்தமாகாது.

அரசியல்வாதிகள் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். எனினும், இந்த அரசியல்வாதிகளின் நடவடிக்கை இழிந்த நிலையில் காணப்பட்டது. நான் ஓர் சிறந்த சிங்கள பௌத்தன் நான் எல்லா இனத்திற்கும் எல்லா மதத்திற்கும் கௌரவமளிக்கின்றேன்.

பௌத்த மத வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றினால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்பில்லை என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடுவத்த விஹாரை ஒன்றில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது

## குற்றம் சுமத்துகிறது ராவண பலய

அரசாங்கம் நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக ராவண பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேபானே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்த காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலளார் பான் கீ மூன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை ஆகியோரை நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கமே அழைத்திருந்தது. தற்போது தென் ஆபிரிக்க துணை ஜனாதிபதியை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைத்திருக்கிறது இவ்வாறான அழைப்புக்களின் மூலம் நாட்டுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாடாளுமன்றில் ஒன்றாக பேச்சுவார்த்தை நடாத்த முடியும் என்றால், இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தைகளையும் ஒன்றாக நடாத்தி முடித்திருக்க வேண்டும்.வடக்கிற்கும் தெற்கிற்கும் தனித் தனியான இராஜதந்திர சந்திப்புக்கள் அவசியமில்லை. நாட்டின் பிரச்சினைகளில் தலையீடு செய்யாது இலங்கைக்கு எவரும் விஜயம் செய்வதில் தவறில்லை.

நாட்டில் முஸ்லிம் கடும்போக்கு வாதம் தலைதூக்கியுள்ளது. முஸ்லிம் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும்போக் குவாதத்தின் பின்னணியில் செயற்பட்டு வருகின்றனர். இதனை நாம் பொறுப்புடன் கூறுகின்றோம். நாட்டில் சட்டம் ஒழுங்கு உரிய முறையில் அமுலபடுத்தப்பட்டால் கடும்போக்கு வாதம் ஏற்படக் கூடிய சாத்தியமில்லை. ஞானசார தேரர், மதுமாதவ அரவிந்த ஆகியோரிடம் மட்டும் விசாரணை நடாத்துவது போதுமானதல்ல. அசாத் சலி, முஜீபுர் ரஹ்மான் உள்ளிட்டவர்வகளிடமும் விசாரணை நடாத்தப்பட வேண்டும். தற்போதைய பௌத்த சாசன அமைச்சர், பௌத்த மதததிற்காக எதனையும் செய்யவில்லை.

# பெயர் நீக்கம் குறித்து ரிஷாட் முறைப்பாடு

(கொழும்பு)

வடமாகாண முஸ்லிம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


கைத்தொழில் மற்றும் வாத்தகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீனால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் பதிவு செய்யும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் மன்னார், மறிச்சிக்கட்டி, வவுனியா, சாலம்பைக் குளம் போன்ற பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள், தமது பெயர் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்று தனக்கு அறிவித்துள்ளதாகவும், அமைச்சர் றிஷாட் பதியுதீன், தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்வாதாரத்தில் உச்சநிலையை அடைய வாழ்வியலைக் கற்றுக்கொள்ளவேண்டும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டிருப்பதனால் எந்த வித பயனும் கிடைக்கப் போவதில்லை. நடைமுறைக்கேற்ற வகையில் நமது வாழ்வியல் நிலைமைகளை மாற்றிக்கொண்டு வாழக் கற்றுக்கொள்ளும் நிலைக்கு அனைவரும் வருவதன் மூலமே தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தில் உச்ச நிலையை அடைய முடியும் என ஈ.பி.டி.பி. ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

மிருசுவில் வடக்கு ஜே/336 பகுதி மக்களின் வாழ்வாதார விடயங்கள் தொடர்பாக அப் பகுதி மக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது. கலந்துகொண்டு உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் அழிவின் எல்லை வரை சென்று வந்தும் அதன் அனுபவங்களைக் கொண்டு தீர்க்கமான அரசியற் தலைமையை சரியான முறையில் தெரிவு செய்யத் தெரியாதவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில் இருந்து யதார்த்த நிலைக்கு செல்வதற்கான சூழ்நிலையைத் தமிழர்கள் உருவாக்காத வரை மக்களுக்கான அனைத்து விடயங்களுக்கும் தீர்வைப் பெறுவது சாதகமற்றதாகவே இருக்கும் என்றார்.

தமிழர்களது ஒட்டுமொத்த அழிவுகளுக்கும் காரணமாக இருக்கும் போலித் தேசியம் பேசுபவர்கள் இத்தனை அழிவுகளின் பின்னரும் தமிழ் மக்களை நிம்மதியாக வாழவிடுவதற்கான வழிகளைச் செய்வதாக தெரியவில்லை. தற்போது சின்னஞ் சிறார்களுக்கு மீண்டும் கடந்து போன கசப்பான விடயங்களை தேசியத்தினூடாக ஊட்டவேண்டும் என கூறுகின்றார்கள். இவர்கள் தமது அரசியல் பதவிகளைத் தக்கவைக்க வேண்டும் என்பதற்காக இளைஞர்களை மறுபடி யும் தவறான பாதைக்கு கொண்டுசெல்லத் தூண்டுவதை மக்களாகிய நீங்கள் தடுத்து நிறுத்தவேண்டும்.

மீண்டும் ஒரு அழிவை நோக்கிய தேசியவாத போலிகளின் பின்னால் செல்வதைக் கைவிட்டு உங்கள் வாழ்வாதார வழிகளை வளப்படுத்தும் பாதைகளைத் தெரிவு செய்வதைப் பற்றி சிந்திக்கவேண்டிய நேரம் இது காலம் இன்னும் கடந்து விடவில்லை. உங்கள் வளங்களை பேரம் பேசிப் பெற்றுக்கொள்ள உங்களுடன் இருந்து உங்களுக்காக பாடுபடுபவர்களுக்கு பலத்தைக் கொடுக்க வேண்டிய சரியான நேரம் இதுதான்.

இச் சந்திப்பில் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், அமீன், மெடிஸ்கோ, கல்ப்பனா மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களுடன் நூற்றுக் கணக்கான அப் பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.



வாழ்வாதார செயற்பாடுகளில் ஆர்வமுடைய மாற்றுவலுவுடைய ஒருதொகுதி இளைஞர், யுவதிகளுக்கான இரு நாள் நிதிமுகாமைத்துவ பயிற்சிப் பட்டறை கடந்த இரண்டுநாட்கள் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் வடபிராந்திய இணைப்பாளர் வி.பிறேம்குமார் தலைமையில் கைதடி நவீல்ட் செவிபுலன் மற்றும் விழிப்புலனற்றோர் பாடசாலையில் நடைபெற்றதோடு இப் பயிற்சிப் பட்டறை யானது சைகைமொழியிலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (90)

# தென்மராட்சி லயன்ஸ்கழகத்தின் புதிய உறுப்பினர்கள் தெரிவு

(கொடிகாமம்)

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டிற்கான புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் கழக அலுவலகத்தில் இடம்பெற்றது.

தலைவராக லயன் த.இரவீந்திரன், செயலாளராக லயன் Dr.இ.கந்தையா, பொருளாளராக லயன் சரோசாதேவி, அங்கத்துவப் பணிப்பாளாராக லயன் ச.செந்தூரன், முதலாவது உப தலைவராக லயன் கா.இராசதுரை, இரண்டாவது உபதலைவராக லயன் அ.கலைச்செல்வி, மூன்றாவது உபதலைவராக லயன் தி.சிவகஜன் ஆகியோரும் ஏனைய உறுப்பினரும் அன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட 306 B இன் இரண்டாவது மாவட்ட உப ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் Dr.தியாகராசா முன்னிலையில் பதவியேற்றனர்.

அன்றைய நிகழ்வில் புதிய உறுப்பினராக ச.சசீந்திரன் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் 250 முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிராந்தியத்தலைவர் லயன். பிரதீபன், பிரதான இணைப்பாளர் லயன். பத்மநாதன், கௌரவ விருந்தினராக வலயத் தலைவர் லயன் எஸ்.கரிகரன், கழக உறுப்பினர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## முதியோர் சங்கத்துக்கு கட்டடம் அமைக்ககோரிக்கை

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரும் விவேகானந்தநகர் முதியோர் சங்கத்திற்கு நிரந்தர கட்டிடம் ஒன்றை அமைத்து தரவேண்டுமென்ற கோரிக்கை இப் பிரதேச முதியோர் சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தில் 72 முதியோர்கள் அங்கம் வகிப்பதோடு ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதி மாதாந்தக் கூட்டம் நடைபெற்றும் வருகின்றது.

நிரந்தர கட்டிடம் இல்லாமையால் கூட்டம் நடத்துவதில் மிகவும் சிரமங்களை எதிர்நோககுவதாகவும் இந்நிலையில் இந்த முதியோர் சங்கத்திற்கு நிரந்தரக் கட்டிடம் தேவையெனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (90)

## றமழான் நற்சிந்தனை



புனித றமழான் மாதம் முஸ்லிம்களுக்கு அல்லாஹுத ஆலாவினால் வழங்கப்பட்ட மிகப்பெரிய வெகுமதியாகும். நம்மில் அந்த வெகுமதியை மதிக்கா தவாகள் றமழான் றமழான் என கூச்சலிடுவதைத்தவிர வேறொன்றும் கிடையாது. (105)

# நாய்களின் தொல்லை

கட்டாக்காலி நாய்களின் தொல்லை வவுனியா நகரிலும் அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த நாய்களின் தொல்லையால் மக்கள் வவுனியா பொது வைத்தியசாலைகளில் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெறுவதிலும் ஊசி- மருந்தேற்றுவதற்கு வரிசையில் நிற்பதைக் காணகூடியதாகவுள்ளது. எனவே இந்த கட்டாக்காலி நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்தி மக்களின் சிரமத்தைக் குறைக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்



(15.07.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆனி மாதம் 31 ஆம் திகதி.
திருதியை / சித்தம்.
அவிட்ட நட்சத்திரம் பி.ப. 02.32 வரை. பின் சதயம்.
இராகு காலம 03.00 - 04.30 வரை. சுபநேரம 10.30 - 12.00 வரை.


ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.


| | |
|---|---|
| மேடம் | பொருட்களின் விற்பனைவிலை கடைக்கு கடைவித்தியாசப்பட்டதால் தடுமாற்றம் ஏற்படல், நண்பர்களை அனுசரித்து நடந்து கொள்வதினால் முரண்பாடுகள் விலகிவிடல். |
| ரிஷபம் | தனியார் கல்வி நிலையத்திற்கு செல்லும்வேளை அட்டகாசம் புரியும் மாணவர் பற்றிய அச்சநிலை ஏற்படல், முற்றாகும் நிலைக்கு எட்டி வந்த விவாகம் விசாரனையின் பின் கைவிடப்படல். |
| மிதுனம் | வழக்கின் முடிவு சாதகமான பலனைத்தரலாம் எனக் கேள்விப்பட்டதனால் மகிழ்ச்சி, உறுதியை நன்றாகப் படித்த பின்னரே கையொப்பம் இடுவதைமேற்கொள்க. |
| கடகம் | போலி முகவரின் விளம்பரத்தை நம்பி பெருத்தமோசமடைக்க வைக்கும் அபாயமேற்படல், பிச்சை கேட்கவந்தவரின் பண்பற்ற செய்கையினால் ரகளை ஏற்படல். |
| சிம்மம் | சரியாகக் கணக்கிடாமல் பணத்தைப் பெற்றதால் துயர் அடைதல், மேலதிகாரிகளின் சுமுக உறவைப்பேணுவதினால் பிரச்சினை முளையிலேயே அற்றுப்போதல். |
| கன்னி | ஆண்டவனை மறந்தாலும் பயணத்தின் போது அடையாள அட்டை எடுத்துச்செல்வதை மறக்காதீர். ஆபத்து வேளையில் அறிமுகமான ஒருவரால் காப்பாற்றப்பட்டு தப்புதல். |
| துலாம் | வெளிநாட்டு மக்களுடன் முகம்பார்த்துக் கதைப்பதினால் மனதில் நிம்மதிதக்க வைத்தல், வேலைப்பளுவில் மூழ்கியிருந்தமையினால் தேகநலம் பாதிப்படைதல். |
| விருச்சிகம் | ஏமாற்ற நினைத்தவரை விடாப்பிடியாக நின்றதால் காரிய சித்தி ஏற்படல், வெளிநாட்டினின்றும் மகழ்வூட்டும் செய்தி ஒன்று தொலைபேசி மூலம் கிட்டும். |
| தனுசு | எந்தவித பொறுப்பும் இன்றி வாய்ச்சொல்லை நம்பிக் கொடுத்த பணத்தை பெறமுடியாது திண்டாட்டம், கொண்டாட்டம் நடாத்த நாட்குறித்த தினத்தில் அமங்கல நிகழ்வு ஏற்பட்டு விடல். |
| மகரம் | எவரையும் கண்டித்து பேச முடியாமல் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளுங்கள், புனக் கொடுக்கல் வாங்கல் மனதிற்கு இன்பமூட்டும் வகையில் கச்சிதமாக இருக்கும். |
| கும்பம் | வெளியூர் பயணத்தின் இலக்கினை அடையமுடியாது இடைத்தங்கல் நாட்டினை அடைதல், போமலின் மருந்தும் பொருட்களினால் பழுக்க வைத்த மாம்பழத்தை உண்டதால் தேகநலம் பாதிப்படைதல். |
| மீனம் | பிறரின் விடயங்களில் அனாவசியமாகத்தலையிடுவதைக் கைவிட்டுவிடுக, சாதுர்யமாகப் பேச்சைக்கொடுத்து காரியத்தில் கண்ணாக இருங்கள். |




# கிண்ணம் வென்றது ஜேர்மனி

## இறுதியில் போராடிச் சரிந்தது ஆர்ஜன்ரீனா


















பரபரப்பான உலகக் கிண்ண கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டியில், மரியா கோட்சா சூப்பர் கோல் அடிக்க, ஜேர்மனி அணி 1-0 என வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

20ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி· இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.00 மணிக்கு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்றது. இப்போட்டியில் சமபலம் கொண்ட ஜேர்மனி, ஆர்ஜன்ரீனா அணிகள் முட்டிமோதிக் கொண்டன.

கிக்ஓப் விசில் ஊதியதும், இரு அணிகளும் ஆக்ரோஷமான ஆட்டத்தை ஆரம்பித்தன. 3ஆவது நிமிடத்தில் முல்லரை, ஆர்ஜென்ரீனாவின் ரோஜோ முரட்டுத்தனமாக மடக்க, ஜேர்மனிக்கு பிரீகிக் வாய்ப்பு கிடைத்தது. இதனை டோனி குரூஸ் வீணாக்கினார். பின் மெஸ்சி தனிநபராக மின்னல் வேகத்தில் ஓடி, கோல் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார்.

ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் டோனி குரூஸ் தலையால் முட்டிய பந்து, நேராக ஆர்ஜன்ரீனாவின் ஹிகுவேன் காலில் வந்து விழுந்தது. இதை பெற்ற ஹிகுவேன் விரைவாக கோல் போஸ்ட் நோக்கி ஓட, பதற்றம் ஏற்பட்டது. ஆனால், இலக்கு இல்லாமல் அடித்து வீணாக்கினார். 30ஆவது நிமிடத்தில் ஹிகுவேன் அடித்த கோல் ஓப்சைட் என அறிவிக்கப்பட, ஆர்ஜென்ரீனா நொந்துபோனது. கடைசி தருணத்தில் ஜேர்மனியின் பெனிடிக்ட் ஹவிட்ஸ் அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டு பறக்க, முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் (0-0) நிறைவடைந்தது.

இரண்டாவது பாதியின் 58ஆவது நிமிடத்தில் ஆர்ஜன்ரீனாவின் ஹிகுவேன் அடித்த பந்தை ஜேர்மனி கோல் காப்பாளர் நூயர் துடிப்பாக தடுத்தார். 78ஆவது நிமிடத்தில் ஹிகுவேனுக்கு மாற்று வீரராக பலாசியோ களமிறக்கப்பட்டார். 88ஆவது நிமிடத்தில், உலகக் கிண்ண வரலாற்றில் அதிக கோல் (16) அடித்து சாதனை படைத்த ஜேர்மனியின் குளோசிற்கு மாற்றாக மரியோ காட்சே களம் புகுந்தார். இறுதிப் போட்டியில் கோல் அடிக்க முடியாத ஏமாற்றத்துடன் திரும்பினார் குளோஸ். இப்படி வீரர்களை மாற்றியும் பலன் கிடைக்காததால், இரண்டாவது பாதியும் கோலின்றி (0-0) நிறைவடைந்தது.

இதையடுத்து, போட்டி கூடுதல் நேரத்திற்குச் சென்றது. 91ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் சுருல் அடித்த பந்தை ஆர்ஜன்ரீனா கோல் காப்பாளர் அருமையாகத் தடுத்தார். 97ஆவது நிமிடத்தில் அருமையான வாய்ப்பை ஆர்ஜன்ரீனாவின் பலாசியோ வீணாக்க, முதல் 15 நிமிடம் முடிந்தது.

இரண்டாவது கூடுதல் நேரத்தின் 113ஆவது நிமிடத்தில் அதிசயம் அரங்கேறியது. சுருல் கொடுத்த பந்தை, நெஞ்சில் வாங்கிய மரியா கோட்சா அப்படியே கோல் போஸ்டுக்குள் லாவகமாக உதைக்க, அரங்கில் இருந்த ஜேர்மனி பிரதமர் மார்கல் உட்பட அந்நாட்டு இரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பினர். இதற்கு பதிலடி கொடுக்கும் ஆர்ஜன்ரீனாவின் முயற்சிகள் வீணாகின. இறுதியில் ஜேர்மனி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, உலக் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது. அடுத்த உலகக் கிண்ண கால்பந்து தொடர் எதிர்வரும் 2018இல், ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை கடந்த 2010இல் (டிச., 2) "பிபா" அறிவித்தது.

உலகக் கிண்ணத்தை வென்ற ஜேர்மனி அணிக்கு சம்பியன் பட்டத்துடன், 207 கோடி பரிசு வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த ஆர்ஜன்ரீனா அணிக்கு ரூ. 148 கோடி பரிசு வழங்கப்பட்டது.

அர்ஜென்டினாவை வீழ்த்திய ஜேர்மனி அணி, உலகக் கிண்ணக் கால்பந்து அரங்கில் 4ஆவது முறையாக (1954, 74, 90, 2014) சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இதன்மூலம் அதிக முறை கோப்பை வென்ற அணிகள் வரிசையில், 2ஆவது இடத்தை இத்தாலியுடன் (1934, 38, 82, 2006) பகிர்ந்து கொண்டது. முதலிடத்தில் பிரேசில் (1958, 62, 70, 94, 2002) உள்ளது.

ஆர்ஜன்ரீனாவை வீழ்த்திய ஜேர்மனி அணி, 24 ஆண்டுகளுக்குப் பின், உலகக் கிண்ணத்தை வென்றது. கடைசியாக இத்தாலியில் 1990இல் நடந்த தொடரில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஜேர்மனி அணி சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம், தென் அமெரிக்க கண்டத்தில் நடந்த உலக கோப்பை தொடரில், கிண்ணத்தை வென்ற முதல் ஐரோப்பிய அணி என்ற புதிய சாதனை படைத்தது.

இத்தொடரில் இரண்டு முறை ஹட்ரிக் கோல்கள் அடிக்கப்பட்டன. ஜேர்மனியின் தோமஸ் முல்லர் (எதிர்-போர்த்துக்கல்), சுவிஸ்சர்லாந்தின் ஷகிரி (எதிர்-ஹோண்டுராஸ்) இச்சாதனை படைத்தனர். வீரர்கள் செய்த தவறு காரணமாக, மொத்தம் 13 பெனால்டி கிக் வாய்ப்பு வழங்கப்பட்டன. இதில் 12 வாய்ப்புகளை கோலாக மாற்றினர். பிரான்ஸ் வீரர் கரிம் பென்சிமா மட்டும் வீணடித்தார்.

இத்தொடரில் 5 சேம்சைட் கோல்கள் அடிக்கப்பட்டன. குரோஷியாவுக்கு எதிரான தொடரின் முதல் போட்டியில், பிரேசில் வீரர் மார்செலோ முதல் சேம்சைட் கோல் அடித்தார்.

கானாவுக்கு எதிராக அமெரிக்காவின் டெம்ப்சே, 30 வினாடியில் கோல் அடித்தார். இதன்மூலம் இத்தொடரில் அதிவேக கோல் அடித்த வீரர் என்ற பெருமை பெற்றார்.

இம்முறை அதிக கோல் அடித்த அணிகள் வரிசையில் ஜேர்மனி முதலிடம் பிடித்தது. இறுதிப் போட்டி உட்பட 7 போட்டியில் விளையாடிய ஜேர்மனி, 18 கோல்கள் அடித்தது. அடுத்த இரண்டு இடங்களில் நெதர்லாந்து (15), கொலம்பியா (12) அணிகள் உள்ளன.

அதிக கோல்கள் வாங்கிய அணிகளுக்கான பட்டியலில், பிரேசில் அணி முதலிடத்தில் உள்ளது. ஏழு போட்டியில் விளையாடிய பிரேசிலுக்கு எதிராக 14 கோல்கள் அடிக்கப்பட்டன. அடுத்த இரண்டு இடங்களில் தலா 9 கோல் வழங்கிய அவுஸ்திரேலியா, கமரூன் அணிகள் உள்ளன.

இம்முறை இறுதி, அரையிறுதி உட்பட 64 போட்டிகளில் மொத்தம் 171 கோல்கள் அடிக்கப்பட்டன. இதன்மூலம் அதிக கோல் அடிக்கப்பட்ட உலகக் கிண்ணத் தொடர் என்ற சாதனையைப் பகிர்ந்து கொண்டது. முன்னதாக 1998இல் பிரான்ஸில் நடந்த தொடரில் 171 கோல்கள் அடிக்கப்பட்டன.

இம்முறை அதிக கோல் அடித்தவருக்கான தங்கக் காலணி விருதை, கொலம்பியாவின் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் தட்டிச் சென்றார். ஐந்து போட்டிகளில் விளையாடிய இவர், மொத்தம் 6 கோல்கள் அடித்தார்.

இத்தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதை, ஆர்ஜன்ரீனா அணி கப்டன் மெஸ்சி தட்டிச் சென்றார். ஏழு போட்டிகளில் விளையாடிய இவர் 4 கோல்கள் அடித்தார். தவிர, 4 முறை ஆட்டநாயகன் விருது வென்றார். சக வீரருக்கு ஒரு முறை கோல் அடிக்க உதவினார். சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுறை விருது ஜேர்மனியின் நூயருக்கு வழங்கப்பட்டது.

இத்தொடரில் அதிக வெற்றி பெற்ற அணிகள் வரிசையில், ஜேர்மனி அணி முதலிடம் பிடித்தது. மொத்தம் 7 போட்டிகளில் விளையாடிய ஜேர்மனி, 6இல் வெற்றி பெற்றது. ஒரு போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இத்தொடரில் தவறு செய்த வீரர்களுக்கு காட்டப்படும் மஞ்சள் அட்டை 183 முறை காட்டப்பட்டது. முதல் முறையாக பிரேசில் வீரர் நெய்மருக்கு காட்டப்பட்டது. அதிகபட்சமாக பிரேசில் அணிக்கு 14 முறை காட்டப்பட்டது. பிரேசில் அணி கப்டன் தியாகோ சில்வாடுக்கு, அதிகபட்சமாக 3 முறை மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

எதிரணி வீரர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்திய வீரர்களுக்கு, சிகப்பு அட்டை காட்டப்பட்டு உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவர். இம்முறை 10 பேருக்கு சிகப்பு அட்டை காட்டப்பட்டது.

இதுவரை நடந்துள்ள 20 உலகக் கிண்ணத் தொடரில் பிரேசில், இத்தாலி, ஜேர்மனி, ஆர்ஜன்ரீனா, உருகுவே, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின் உள்ளிட்ட ஏழு அணிகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளன.

அதிகபட்சமாக பிரேசில் அணி 5 முறை (1958, 62, 70, 94, 2002) கோப்பை வென்றுள்ளது.

இத்தாலி (1934, 38, 82, 2006), ஜெர்மனி (1954, 74, 90, 2014) தலா 4, ஆர்ஜன்ரீனா (1978, 86), உருகுவே (1930, 50) தலா 2, பிரான்ஸ் (1998), இங்கிலாந்து (1966), ஸ்பெயின் (2010) தலா ஒரு முறை கிண்ணத்தைக் கைப்பற்றின.

விளையாட்டு செய்திகள்

## முதல் டெஸ்ட் சமநிலை

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் இங்கிலாந்தின் பிரென்ட் பிரிட்ஜில் நிறைவடைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக் ஆடிய இந்திய அணி 457 ஓட்டங்களையும், இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக 496 ஓட்டங்களையும் பெற்றன.

39 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 391 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பின்னி 78, புவனேஸ்வர் குமார் ஆட்டமிழக்காது 63, புஜாரா 55, முரளிவிஜய் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். அலி மூன்று, ஸ்ரூவெர்ட் புரொட் இரண்டு, குக் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதன் மூலம் முதல் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக அண்டர்சன் தெரிவு செய்யப்பட்டார். இதே வேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி லோட்ஸில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மாகாண தடகளப் போட்டியில்

# யாழ். மத்தியால் நான்கு சாதனைகள் முறியடிப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் நான்கு சாதனைகளுடன் பல பதக்கங்களை வென்று யாழ். மத்திய கல்லூரி அணி அசத்தியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் ஜெ.அபிமன், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தடை தாண்டலில் பீ.நிருபன் மற்றும் ரீ. செந்தூர்ஜன் ஆகியோர் புதிய சாதனைகளைப் படைத்துள்ளனர். அத்துடன் 17 வயதுப் பிரிவில் பி.நீருஜன், 19 வயதுப்பிரிவில் டி.யோய்ஆகாஸ் ஆகியோர் சிறந்த மெய்வல்லுநர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மெய்வல்லுநர் போட்டியில் ஜெ.அபிமன், டி.ஜேய்ஆகாஸ், பீநீருஜன், ரீ.செந்தூரன் ஆகியோர் கூடிய வெற்றிகளை பாடசாலைச் சமூகத்திற்காகப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

விசேட தேவையுடைய வீரர்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.ஜெயரூபன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். 21 வயதுப்பிரிவுப் போட்டியில் 400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் போட்டியில் ஜெ.அபிமன் புதிய சாதனை படைத்தார். இவர் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 51.6 செக்கன்களில் ஓடி முடித்துள்ளதுடன் 200 மீற்றர் போட்டியில் 23.6 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார். அத்துடன் 100மீற்றர் ஓட்டப் போட்டியில் 11.8 செக்கன்களில் ஓடி முடித்து 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.





19 வயதுப் பிரிவிற்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் டி.ஜோய் ஆகாஸ் 53 .1 செக்கன்களில் ஓடி முடித்து முதலாமிடத்தையும், .400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 59.8 செக்கன்களில் ஓடி முடித்து முதலாமிடத்தையும் பெற்றுள்ளார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் பீ.நீரூபன் 1.00.0 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளார். இவர் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2.10.6 செக்கன்களில் ஓடி முடித்து 2ஆம் இடத்தையும், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 55.5 செக்கன்களில் ஓடி முடித்து 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் செந்தூர்ஜன் 17.1 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இவர் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் எஸ்.மதுசன் 1.56 மீற்றர் தூரம் பாய்ந்து 2ஆம் இடத்தையும், 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் எஸ்.சஞ்சீவன் 44.43 மீற்றர் தூரம் எறிந்து 2ஆம் இடத்தையும் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் ஆா.ரகுராஜ் 1.85 மீற்றர் பாய்ந்து 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். அஞ்சலோட்டத்தில் மூன்று பதக்கங்களையும் யாழ். மத்திய கல்லூரி அணி கைப்பற்றிக்கொண்டது. இவர்கள் தேசியப் போட்டிகளில் சாதித்து பெருமை சேர்க்க வேண்டும் என கல்லூரிச் சமூகம் வாழ்த்தியுள்ளது.

# மானிப்பாய் இந்து மூன்றாமிடம்



அமரர் இராசதுரை நினைவுக் கால்பந்துத் தொடரின் மூன்றாமிடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மத்திய கல்லூரியினால் நடாத்தப்பட்ட அமரர் இராசதுரை நினைவுக் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. வடமாகாண பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின.

முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி அடுத்தடுத்து கோல் மழை பொழிந்தது. இதற்குப் பதிலடி கொடுக்க ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் அணி பெரும் பிரயத்தனம் செய்தபோதிலும் இறுதி வரை முடியவில்லை. நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (எஸ்.பி.)

## தேசிய மேசைப்பந்தாட்டம்

# 3 யூனியன் கல்லூரி வீரர்கள் தகுதி

(தெல்லிப்பளை)

தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீரர்கள் மூவர் தகுதி பெற்றுள்ளனர்.

வடமாகாண மேசைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த அ. றொசான் மகாநாமா, சி. வித்தகன், க. கோகிலசாந்தன் ஆகியோர் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டனர். இதன் மூலம் தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிக்கு இவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஆவணி மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் மோகனிடம் அதிக பயிற்சிகளை இவர்கள் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்று வீரர்களிடமும் சிறந்த ஆற்றல் இருப்பதை நான் பல தடவைகள் இனங்கண்டிருக்கின்றேன். இவர்கள் சிறந்த வீரர்கள் என்பதில் ஐயமில்லை. தேசிய போட்டியில் ஜொலிப்பார்கள் என்ற பெரு நம்பிக்கை எனக்குண்டு என மோகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் சாதித்து கல்லூரிச் சமூகத்திற்கும் மாகாணத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என யூனியன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் வாழ்த்தி வருகின்றனர். (17)

# மூன்றாமிடம் யாழ். பல்கலை

இலங்கை அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மரதன் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

நடப்பு ஆண்டுக்கான பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளின் ஒரு கட்டமான வீதியோட்டப் போட்டி நேற்று முன் தினம் முதற் தடவையாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்விப் பிரிவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் 11 பல்கலைக்ககங்ழகளிலிருந்து 77 போட்டியாளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இதில் முதலாமிடத்தை சிறி ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பி.டபிள்யூ.கயான் சன்ஜீவ பெற்றுக்கொண்டார். முறையே இரண்டாம், மூன்றாமிடங்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த என்.கிருபனசாந்தன், எம்.வீ.எஸ்.பிரியங்க ஆகியோர் பெற்றுகொண்டனர்.

புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது இடத்தை சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் இரண்டாமிடத்தை பேராதனைப் பலகலைக்கழகமும் மூன்றாமிடத்தை யாழ். பல்கலைக்கழகமும் பெற்றுக்கொண்டன.

## நிரோசன், பிரியலக்ஷன் சிறப்புப் பந்துவீச்சு

# வென்றது வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்றில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி கடந்த 12ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணி 42.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோசன் 96, திலீபன் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன் நான்கு, ஜனுதாஸ் மூன்று, உமாசுதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 29.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் பவிதரன் 32, உமாசுதன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோசன் ஐந்து, பிரியலக்ஷன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (17)

# அநாவசியமாக அரசியலாக்கப்பட்டு “கானல் நீராகிப்போன” யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்

– பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் –

யாழ்ப்பாணத்துக்கான தூய குடிநீர்ப் பிரச்சினை பற்றி அலட்சியமாகப் பேசுவோர் சில விடயங்களை கவனத்திற்குக் கொள்ளவில்லை என்று


**மகாவலி நீரினை யாழ்ப்பாணம் கொண்டு வருவதன் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள நிலங்கள் பெருமளவு மத்திய அரசாங்கத்தின் கீழேயே வரும். இங்கு மகாவலி நீரினைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தம் செய்தவர்கள் மறைமுகமாக நீரிற்காக நிலத்தினை பண்டமாற்று செய்துள்ளார்கள். இத்தகைய ஒரு பண்டமாற்றத்தினைச் செய்வதற்கு இவர்களுக்கு ஆணை எங்கிருந்து கிடைத்தது?**

தெரிகிறது. யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர்பாசனத்திற்கும் நேரடி நுகர்விற்கும் பொருத்தமற்றதாக மாறிக்கொண்டிருக்கின்றது. நிலத்தடியில் நன்னீரின் அளவு, நன்னீரின் வில்லைகள் என்பன மிக வேகமாகக் குறைந்து கொண்டு வருகின்றன.

இவ்வாறு நன்னீர் தரத்திலும், அளவிலும் குறைந்து செல்கின்ற போக்கினை மாற்றி பிரச்சினையை குறுகிய காலத்தினுள் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வருவதற்கு ஏதாவது உள்வாரியான சாத்தியமான வழிவகைகள் உண்டா என்பது தான் இங்கு போதியளவு பேசப்படாத, பேசத் தயங்குகின்ற பிரச்சினையாகும்.

தற்போதுள்ள வாய்ப்புகளின் படி இத்தகைய போக்கினை பின்னோக்கித் திருப்புவதற்கு உள்வாரியான தீர்வுகள் ஆகக் குறைந்தது அடுத்த ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குள் சாத்தியம் இல்லை என்று தெரிகிறது.

உள்வாரியான தீர்வுகள் என்று இங்கு கருதப்படுபவை யாதெனில் விவசாய முறைமைகளில் மாற்றம், மோச மானநிலை காணப்படும் பிரதேசங்களில் விவசாயப் பரப்பளவைக் குறைத்துக் கொள்ளுதல், நீர் வெளியேற்றத்தைக் குறைத்துக் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வருதல், மோசமான நிலை காணப்படும் பிரதேசங்களில் இயந்திரங்கள் மூலம்



நீர் இறைத்தலை முற்றாக தடை செய்தல், பொருத்தமற்ற மலசலகூடங்களை இடித்து புதிய மலசலகூடங்களை நிர்மாணித்தல், தாழ்நிலைக் குடியிருப்பாளருக்குப் பொருத்தமான வீட்டுத்திட்டங்களை உருவாக்குதல், கழிவு மற்றும் கழிவுநீர் வடிகாலமைப்பு முறைகளை நிர்மாணித்தல், சிறு குளங்களை மீள நிர்மாணித்தல், புதிய சட்ட ஒழுங்கு விதிகளை உருவாக்குதல், அவற்றைப் பற்றிய பொதுசன விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்றவற்றை வரிசைப்படுத்தலாம்.

நன்னீர்ச் சமநிலையை சாதகமாகப் பேணுவதாயின் இத்தகைய கடுமையான செயன்முறைகளை அமுல் செய்யவேண்டும். இன்றைய நிலையில் மீள உட்செலுத்தும் நன்னீரின் அளவின் 50 சதவீதத்தை மீள எடுக்காது பேணவேண்டும் என்றும் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

தற்போது நிலத்திற்குக் கீழே செல்லுகின்ற நீரின் அளவு வருடாந்தம் ஏறக்குறைய 0.56 மில்லியுன் கனமீற்றர் ஆகும் என்றும் வெளியே எடுக்கும் நீரின் அளவு ஏறக்குறைய 0.66 மில்லியன் கனமீற்றர் ஆக இருக்கின்றது என்றும் ஏற்கனவே இது ஒரு பாதகமான நிலையையே குறித்து நிற்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

எமது மாவட்டத்தின் சமூக, பொருளாதார நிலை மேம்படும் போது நன்னீருக்கான தேவை அதிகரித்துச் செல்லும். மத்திய வங்கிக் கணிப்பின் படி வடமாகாண பொருளாதார வளர்ச்சி வீதம் 25 வீதத்திற்கு மேல் என்று கூறப்பட்டாலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு இது எவ்வகையிலும் 15 வீதத்திற்குக் குறைய வாய்ப்பில்லை. இதில் ஆகக்குறைந்தது 2/3 பங்கு பொருளாதர நடவடிக்கைகள் நீரிற்குரிய தேவையை அதிகரிக்கின்ற தன்மை கொண்டவையாக அமையும்.

இதனடிப்படையில் 5 ஆண்டுகளின் பின்னர் நீரின் வெளியே எடுக்கும் அளவு 1.06 மில்லியன் கனமீற்றர் அளவாக இருக்குமென்றும் அதே நேரம் உட்செலுத்தும் நன்னீரின் அளவு ஏறக்குறைய 0.70 மில்லியன் கனமீற்றர் அளவாக இருக்கும் எனவும் கணிக்கப்படுகின்றது. இந்த விகிதத்தின் படி நீண்ட காலத்தில் கூட 40 வருடத்திற்கு முன் இருந்த நீரின் அளவையும் தரத்தையும் எய்திக் கொள்ள முடியாத நிலை தோன்றும். குறுங்காலத்திலேயே நிலைமை மோசமடையும்.

எனவே இந்தப் போக்கினை சமாளிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக வெளியிலிருந்து நிலமேற்பரப்பு நீரினை குறுகிய காலத்தினுள்ளேயே கொண்டு வந்து சேர்ப்பது தான் பொருத்தமான வழியாகும். அது வரை நாம் மாசடைந்த நீரினைப் பருகுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை போல் தெரிகிறது.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் நீர் விநியோகத் திட்டத்தினை ஒரு சிலர் அரசியலாக்கி விவசாயிகளைக் கொண்டு மறுப்புத் தெரிவித்து வருவதன் மூலம் அரசாங்கத்திற்கு தற்போது மற்றுவழி தேடவேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே அரசு மொறகஹகந்த திட்டத்தினை துரிதப்படுத்தி அதன் மூலம் மகாவலி நீரினைக் கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி மகாவலி நீர் 2020 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்குரிய பணிகளை தொடங்கியுள்ளன. சில தகவல்களின் படி, நீர் வழங்கல் திட்டங்களின் உபநடவடிக்கைகள் சில ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

மகாவலி நீரினை யாழ்ப்பாணம் கொண்டு வருவதன் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள நிலங்கள் பெருமளவு மத்திய அரசாங்கத்தின் கீழேயே வரும். இங்கு மகாவலி நீரினைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தம் செய்தவர்கள் மறைமுகமாக நீரிற்காக நிலத்தினை பண்ட[illegible] செய்துள்ளா[illegible] ஒரு பண்ட[illegible] செய்வதற்கு [illegible] ஆணை எங்கிருந்து கிடைத்தது?

தமிழ் உரிமை என மாத்திரம் குரல் எழுப்புவோ[illegible] நீரின்றி மனிதர் மட்டுமல்ல எந்த உயிரினமும் வாழாது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். உயிர் வாழ்ந்தால் தான் குரல் எழுப்பலாம். சூழல் பசுமை என எழுப்பப்படும் குரல்கள் எல்லாம் சுயநல அரசியல் சார்ந்த குரல்கள் என்பதைத் தமிழ் மக்கள் உணர வேண்டும். நீரின்றி பசுமை இல்லை. நீரின்றி அமையாது உலகு.

“ஒருதுளி மழைநீரும் மனிதனுக்குப் பயன்படாது கடலை அடைய விடேன்” என்ற பழைய மன்னன் எங்கே? “ஒரு துளி நீரையும் குடிப்பதற்கு யாழ்ப்பாணம் கொண்டு செல்லவிடேன்” என கூக்குரல் இடும் அரசியல்வாதி எங்கே?

# உள்ளங்கை, பாத கசிவு (Hyper hidrosis)

P.T. ரஞ்சனா
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ் போதனா வைத்தியசாலை

உடலின் ஒருசீர்த்திடனிலையின் ஒரு அங்கமே வெப்பச்சீராக்கல், சாதாரண உடல் வெப்பச்சீராக்கலில் வியர்வைச் சுரப்பிகளின் பங்கும் குறிப்பிடத்தக்களவில் அமைகின்றது. சாதாரண உடல்வெப்பச்சீராக்கலுக்கு மேலதிகமாக சிலரில் அதிகமான வியர்வை சுரக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறு அதிக வியர்வை வெளியேற்றம் உடையோர் உளவியல் ரீதியில் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். நாளாந்த வேலைகளில் நெருக்கீடுகளை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக எழுதுகருவியை தொடரந்து பிடிப்பதில் கூட சிரமத்தைச் சந்திக்கின்றனர். அது மட்டுமன்றி அதிக வியர்வை ஏற்படும் இடங்களில் பக்ரீரியாத் தொற்று ஏற்பட்டு துர்நாற்றம் ஏற்படுவதனாலும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அடிப்படையான உள்ளங்கை, பாத கசிவு உடையவர்களில் குறிப்பிட்ட பகுதிகளில் அதாவது உள்ளங்கை, பாதம் மற்றும் கமக்கட்டுப் பகுதிகளில் அதிக வியர்வைச் சுரப்பு காணப்படும். இரு புறமும் பொதுவாக சமாந்தரமாகவே வியர்த்திருக்கும். வாரமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது இவ்வாறான வியர்வை அதிசுரப்பு காணப்படும்.

பொதுவாக இவ்வாறான நிலைமை 25 வயதிற்கு முன்னதாகவே ஆரம்பித்திருக்கும். நித்திரையில் இவ்வாறான வியர்வை நிலைமை நிறுத்தப்பட்டிருக்கும். 65 வீதமானவர்களில் குடும்ப அங்கத்தவர் ஒருவர் இவ்வகை நோய் நிலைமையால் பாதிக்கப்பட்டிருப்பர்.

இவ்வகை வியர்வை அதிசுரப்பு நிலைமை எல்லா வயதினரிலும் ஏற்படலாமாயினும், பதின்ம பராயத்தினரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. சிறுவர்களில் உள்ளங்கைகள் மற்றும் பாதங்களிலும் பூப்பின் பின் கமக்கட்டுகளிலும் இவ்வாறான வியர்வை அதிசுரப்பு காணப்படுகின்றது. ஆண்களை விட பெண்களே சற்று அதிகமாக இந்நிலைமையால் பாதிக்கப்படுகின்றனர்.

ஏன் இவ்வாறு ஏற்படுகின்றது? இவர்களிலும் மற்றையோரைப் போன்றே எண்ணிக்கையில் சமனான அளவு வியர்வைச் சுரப்பிகள் இருப்பினும், அவற்றினால் உருவாக்கப்படும் வியர்வைச் சுரப்பு மற்றையோருடன் ஒப்பிடும் போது அதிகமாகக் காணப்படு



வதுடன். இவ் வகை அதிக வியர்வை சுரக்கவல்ல வியர்வைச் சுரப்பிகள் உள்ளங்கை, பாதம், கமக்கட்டு பகுதிகளில் செறிந்திருக்கின்றன.

இவ்வகை வியர்வைச் சுரப்பிகள் உலர்காலநிலை, மன அழுத்தம், உடற்பயிற்சி மற்றும் சிகரட், மது பாவனை, உறைப்பான உணவு உண்ணுதல் என்பவற்றின் போது கிட்டத்தட்ட 10 லீற்றர் வரையான வியர்வையைக் கூட சுரக்க முடிவதுண்டு!


இவ்வாறான உள்ளங்கை பாத கசிவினால் அவதியுறுவோர் இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். அதிகம் உணர்ச்சிவசப்படுதலையும், மன அழுத்தம் தரவல்ல சந்தர்ப்பங்களையும் இயன்றளவில் தவிர்க்க வேண்டும்.

உறைப்பான உணவுகள், சிகரட் மதுபானம் பாவித்தல் என்பவற்றையும் தவிர்த்தல் வேண்டும். இயற்கை நாரிலான தளர்வான ஆடைகளையே அணிவதற்காக தெரிவு செய்ய வேண்டும்.

இவ்வகை அடிப்படையான உள்ளங்கை பாதக் கசிவுடையோர் அலுமினிய குளோரைட் தயாரிப்புகளை அதிசுரப்பு வியர்வை உடைய இடங்களில் பூசுவதன் மூலம் குணப்படுத்தலாம் எனினும் இது நிரந்தர தீர்வாகாது. சிலருக்கு பூசுமிடங்களில் கடி ஏற்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கை முறை மாற்றம் அலுமினிய குளோரைட் தயாரிப்புப் பாவனையின் பின்னரும் அதிசுரப்பு வியர்வை நிலைமை இருப்பின் தோல் வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது அவசியமானதாகும்.

குறிப்பிட்ட பாகங்கள் மட்டுமன்றி உடல் முழுவதும் கடுமையாக வியர்க்கும் தன்மை இரவு நேரத்தில் வியர்த்தல், திடீர் நிறை இழப்பு,



# பெரியாரின் இளம் பிராயத்தில்...

ஈ.வெ.ரா. பெரியார், தன் 80ஆவது பிறந்த நாள் (செப்.17, 1962) அன்று "விடுதலை" பத்திரிகையில் இப்படி எழுதுகிறார்:

"நான் சிறு வயது முதற்கொண்டே சுதந்திர எண்ணமுடையவனாகவும் நான் சொல்கிறபடி மக்கள் நடக்க வேண்டுமென்கிற உணர்ச்சி உள்ளவனாகவும் இருந்தே வந்திருக்கிறேனே ஒழிய, மற்றவர்கள் சொல்கிறபடி நடக்க வேண்டுமென்கிற எண்ணமற்றவனாகவே இருந்திருக்கிறேன். இன்றைக்கும் அப்படியே இருக்கிறேன்.

[illegible] சரித்திரத்தில் எனக்கு தலைவனே [illegible]தில்லை. என் பத்தாவது வயதில் [illegible]ரி - நான்காவது வகுப்பு பாஸ் செய்துவிட்டு வியாபாரத் துறையில், எனது தகப்பனார் மண்டிக் கடையில், கையாளாக ஆகிவிட்டேன்.

என் குழந்தைப் பருவத்தில், என் தாயாருக்கு உள்ள இரண்டு குழந்தைகளில் நான் இரண்டாவது குழந்தையாக இருக்கும்போது என்னை, என் தகப்பனாருடைய சிறிய தாயாருக்கு வளர்த்துக் கொள்ளும்படி "தத்து" போல் கொடுத்துவிட்டார். அதனால் நான் ஒரு அடங்காப்பிடாரியாகவும், தறுதலை என்று சொல்லும்படியாகவும், சில சமயங்களில் ஒருநாள் இரண்டு நாள் கூட வீட்டுக்கு வராமல் ஊர் சுற்றிக் கொண்டு திரிபவனாகவும் இருந்திருக்கிறேன். அப்போது என் வளர்ப்புத்தாய், நான் என்னைப் பெற்ற தாய்வீட்டிற்குப் போயிருப்பேனோ என்று தேடாமலும், கவலைப்படாமலும் இருந்துவிடுவார்.

இப்படிப்பட்ட என் சிறுவயதில், இது போன்ற சில பையன்கள் சேர்க்கை எனக்கு உண்டு. அந்த சேர்க்கையர் கூட்டத்திற்கு நான்தான் மேலாளராக (தலை வனாக) இருப்பேன். தெரு சுற்றிக் கொண்டு திரிவ தில் சாதி பார்ப்பதோ, எச்சில், சுத்தம், அசுத் தம் பார்ப்பதோ கிடையாது. எச்சில் பீடியைப் பொறுக்கி வந்து பீடி புகைப்போம்.

அப்பொழுது குழந்தைகளுக்கு சாந்தி கழிப்பது என்ற வழக்கம் அதிகம். அமாவாசை மற்றும் சில "விசே" நாள்களில் சாந்திகழித்து, அந்த சாந்திப் பண்டங்களை முச்சந்தியில் கொண்டு கொட்டிவிட்டுப் போய்விடுவர். நாங்கள் அவற்றில் உள்ள பண்டங்களைப் பொறுக்கி எடுத்துவந்து பங்கு போட்டுக் கொண்டு சாப்பிடுவோம்."

**(நன்றி: 'உண்மை' இதழ்.)**

# தலைமுறைகள்



- R.P. ராஜநாயஹம் -

தெலுங்குப் படம் "மனம்". நாகேஸ்வர ராவ், நாகார்ஜுனா, நாக சைதன்யா இணைந்து நடித்து வெளி வந்தது. மூன்று தலைமுறை நடிகர்கள் அப்பா, மகன், பேரன் இணைந்து நடித்த படம் உலக சினிமாவில் இது ஒன்று மட்டுமே என்று பரவலாகப் பேசப்பட்டது.

"தி இந்து" பத்திரிகையின் திரை உலாவிலும் இப்படியே குறிப்பிடப் பட்டுள்ளது! ஆனால் அது உண்மையல்ல. மூன்று தலை முறை இணைந்து நடிப்பது 2014இல் நிகழ்ந்து விட்ட அதிசயம் என்ற பிரமை தவறாகும்.

1971இல் பிருதிவிராஜ் கபூர், ராஜ் கபூர், ரந்திர்கபூர் இணைந்து நடித்து "கல் ஆஜ் அவுர் கல்" அதாவது "நேற்று, இன்று, நாளை" என்ற பெயரில் ஒரு படம் பேரன் ரந்திர் கபூர் இயக்கத்தில் வந்துள் ளது. தாத்தா ப்ருத்விராஜ் கபூர், அப்பா ராஜ் கபூர், பேரன் ரந்திர் கபூர் மூவரும் இணைந்து கலக்கிய படம் அது. ரந்திர கபூர் தான் கரிஷ்மா கபூர், கரீனா கபூர் இருவரின் அப்பா. தற்போது ஹிந்தித் திரையுலகில் கலக்கிக் கொண்டிருக்கும் ரன்பீர் கபூரின் பெரியப்பா.



# கருத்துக் கணிப்பின் அரசியல்

– வெ. ஸ்ரீராம்

கருத்துக் கணிப்பு என்பது பித்தலாட்டமே என்கிறார் பிரெஞ்ச் சமூகவியல் அறிஞர் பூர்தியு.

பொதுவாக, மக்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்களுடைய அபிப்பிராயங்கள் Survey என்ன என்பதைத் தெரிவிக்கப் பல சாதனங்கள், ஊடகங்கள் இருக்கின்றன. கட்சித் தொண்டர்கள் போன்றோரும் இருக்கின்றனர். இவற்றில் இன்று மிகவும் பரவலாகப் பேசப்படுவது: கருத்துக் கணிப்பு.

பெரும்பாலும் தேர்தல் சமயங்களில் அடிபடும் இந்தக் கருத்துக் கணிப்பு எந்த அளவுக்கு உண்மையைப் பிரதிபலிக்கிறது என்றோ, அது யாரால், எந்த உள்நோக்கங்களுடன் நடத்தப்படுகிறது என்றோ யாரும் கேள்வி எழுப்புவது இல்லை.


மிகவும் நாசூக்காக சமூகத்தைப் பாதிக்கும் இந்தச் செயற்பாட்டைப் புறவ[illegible] நோக்குடன் ஆராயும் சமூகவியலாளர்களும் மிக அரிதாகவே இருக்கிறார்கள். பொதுவாக, சமூகவியல் ஆய்வு என்கிற துறையே போதுமான அளவு ஆழமாகவோ பரவலாகவோ இங்கு இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

1972இல் வட பிரான்ஸின் அர்ராஸ் நகரத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் "மக்கள் கருத்து என்பது இல்லாத ஒன்று" என்ற சர்ச்சைக்குரிய தலைப்பில் பியர் பூர்தியு என்ற சமூகவியலாளர் ஆற்றிய சுவாரசியமான உரையில், கருத்துக் கணிப்பை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, இதுதான் மக்கள் கருத்து என்ற ஒன்றை முன்வைப்பதில் உள்ள குறைபாடுகள் பற்றிப் பேசுகிறார்.

கருத்துகளைச் சேகரிக்கும் செயல்பாட்டின் பின்னால் பூடகமாக மூன்று கருதுகோள்கள் இருப்பதாக அவர் சொல்கிறார். முதலாவதாக, எல்லோரிடமுமே குறிப்பிட்ட ஒரு கருத்தை உருவாக்குவதற்கான ஆற்றலோ அறிவோ நாட்டமோ இருக்கக்கூடும் என்ற கருதுகோள். எல்லோரும் சமம் என்ற பொதுவான ஜனநாயகக் கோட்பாட்டை மேற்சொன்ன விஷயத்துடன் போட்டுக் குழப்பிக்கொள்ளாமல் இருந்தால், இந்தக் கருதுகோள் எந்த அளவுக்குத் தவறானது என்பது புரியும் என்கிறார்.

இரண்டாவது, எல்லாவிதக் கருத்துகளுக்கும் சமமான மதிப்பீடு இருக்கிறதென்று நம்பும் கருதுகோள். பிரச்சினை ஒன்றினால் பாதிக்கப்பட்டவர், அதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பவர், அதுகுறித்துச் சற்றும் அக்கறை கொள்ளாதவர் என்பதான பல கோணங்களிலிருந்து பெறப்படும் கருத்துகளைக் கொண்டு ஒரு கூட்டல் கணக்கைப் போல, எடுக்கப்படும் முடிவு எப்படி அர்த்தமுள்ளதாக இருக்க முடியுமென்று பூர்தியு வியக்கிறார்.

மூன்றாவது கருதுகோள்: எல்லோரிடமும் அதே கேள்விகள் கேட்கப்படுவதன் மூலம் பிரச்சினைகள் இவைதான் என்பதில் எல்லோரிடையேயும் உடன்பாடு இருக்கிறது; அதாவது, நியாயமாகக் கேட்கப்பட வேண்டிய கேள்விகள்தான் இவை என்று எல்லோரும் நினைக்கிறார்கள் என்ற கருதுகோள்.




தன்னுடைய உரையில் இந்த மூன்று கருதுகோள்களுமே உண்மை நிலைக்குப் புறம்பானவை என்று வாதிடும் பூர்தியு, இந்தச் செயற்பாட்டின் பல கூறுகளையும் அலசுகிறார்.

மக்களைச் சந்தித்து, அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டு, அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிந்து கொள்வது என்பது தார்மிக அடிப்படையில் மிகவும் நியாயமான செயற்பாடுதான். ஆனால், அதைச் செய்பவர்கள் நடுநிலையோடும் முழுமையாகவும் உள்நோக்கம் எதுவுமின்றியும் செய்கிறார்களா என்பதே கேள்வி.

உதாரணமாக, அரசின் பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய கருத்துக் கணிப்பில், அதைக் குறித்த கருத்தைத் தெரிவிப்பவர்களிடம் அதற்குத் தேவையான தரவுகள் இருக்கின்றனவா? பதிலளிப்பவரின் சமூகப் பின்னணி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா? கருத்தைக் கோரும் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதில்களின் மாற்றுத் தேர்வுகளில் எல்லா சாத்தியக்கூறுகளும் அடக்கமா?

இவை போன்ற பல கேள்விகளை எழுப்பும் பூர்தியு, "வேறுபாடுகள்: ரசனைகுறித்த மதிப்பீட்டின் மீதான சமூகவியல் விமர்சனம்" (1979) என்ற தன்னுடைய புத்தகம் மூலமாக உலக அளவில், பண்பாட்டு அம்சங்களில் ஒருவருடைய ரசனைகுறித்த் மதிப்பீடுகள் அவருடைய சமூகத் தளத்தைச் சார்ந்து இருப்பதோடல்லாமல், அவரை அந்தத் தளத்திலேயே நிறுத்தி அடையாளப் படுத்துகிற செயற்பாடுகள் என்பதை மிக விரிவாக, ஆழமாக விளக்கியிருக்கிறார்.

வரலாறு, சமூகத்தில் ஏற்கெனவே உருவாக்கியுள்ள படிநிலைகளை மாற்றாமல் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தினர் கையாளும் உத்திகளுக்கு ஊடகங்கள் துணைபோகும் அபாயத்தைப் பல புத்தகங்கள் மூலமாகவும், உரைகள் மூலமாகவும் உணர்த்தியிருக்கிறார்.

ஒரு சமூக யதார்த்தத்தைப் பற்றிப் பொதுப்படையாகப் பேசுவதோ, அதீதமாக எளிமைப்படுத்துவதோ பிரச்சினையின் உண்மை நிலையை மறைத்து விடுகிறது. உதாரணமாக, பாமர மக்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றிப் பேசும்போது, இவை போன்ற எளிமைப்படுத்துதல்கள் அர்த்தமற்றவையாக ஆகின்றன. குடும்ப ஒழுக்க நெறிகள், தலைமுறைகளுக்கு இடையேயும், ஆண்கள், பெண்களுக்கு இடையேயும் உள்ள உறவுகள் போன்றவற்றில் சமூகத்தின் மற்ற பிரிவினர்களைவிட அதிக கட்டுப்பாடும், மரபின் பிடியும் இவர்களிடையே காணப்படுகின்றன.

மாறாக, சமூகப் படிநிலைகளைப் பாதுகாக்க அல்லது மாற்ற விழையும் அரசியல் அமைப்புகள் பற்றியோ, அவற்றின் செயற்பாடுகள் பற்றியோ கேட்கப்படும்போது இவர்கள் அடிப்படையில் பெரும் மாற்றங்களை விரும்புகிறார்கள். ஆகவே, ஒரே ஒரு வாக்கியத்தில் பாமர மக்கள் மாற்றங்களை வரவேற்கிறார்கள் என்றோ இல்லை என்றோ சொல்வது சரியும் இல்லை, தவறும் இல்லை என்கிறார் பூர்தியு.

மக்கள் கருத்தை அறிய விரும்பும் "கருத்துக் கணிப்பு" பற்றிய அவருடைய முடிவுரையில் பூர்தியு சொல்கிறார்: "கருத்துக் கணிப்பு செய்பவர்களும் அவர்களின் முடிவுகளை அப்படியே தங்களுக்காக பயன்படுத்துபவர்களும் மறுவிசாரணைக்கு இடமின்றி ஒப்புக்கொண்டுவிடும் மக்கள் கருத்து என்பது உண்மையில் இல்லாத ஒன்று என்பதே என்னுடைய கருத்து."

நெஞ்சுப்படபடப்பு போன்ற நோயறிகுறிகள் இருப்பின் உடனடி வைத்திய ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் மேற்கூறிய அறிகுறிகள் உடலில் வேறு நோய்களின் தாக்கம் ஏற்பட்டு அந்நோய்த் தாக்கத்தின் விளைவினாலேயே அதிக வியர்வை சுரத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்தியம்ப வல்லன.

அதாவது காசநோய், மலேரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படும் போது சில வகை மருந்துகளாலும், நீரிழிவு, கேடயச்சுரப்பியின் அதிசுரப்பு நிலை (Hypethyrodism) மற்றும் சில அகஞ்சுரப்பிகளில் ஏற்படும் நோய் நிலைமைகள் (Hyperpituitarism, Phalochromoaytoma) சில வகைப் புற்றுநோய்கள் (Lymphoma) இதய செயலிழப்பு, பதற்றம் (Anxiety) பாரிசவாதம், முண்ணாண் பாதிப்பு ஏற்படல், மாதவிடாய் நிறுத்தம் ஏற்படல் போன்ற நிலைமைகளிலும் அதிகமான வியர்வை சுரத்தல் காணப்படும்.

உள்ளங்கை, பாத கசிவு தவிர்த்து மேற்படி நோயறிகுறிகளும் இருக்கும் பட்சத்தில் வைத்திய ஆலோசனையை நாடுத்ல் நன்று.




## தன்னம்பிக்கை



"நம்பிக்கையாளர்
கூண்டிலிருக்கும் பறவை போன்றவர்,
ஆனால் சுதந்திரச் சிந்தனையாளர்
மேகத்தைக் கிழித்துப் பறக்கும்
அயராத சிறகுகளையுடைய
கழுகைப் போன்றவர்."

- ராபர்ட் கிரீன் இங்கர்சால்

"A believer is a bird in a cage,
a freethinker is an eagle parting
the clouds with tireless wing"

- Robert Green Ingersoll






பள்ளிப்படிப்பை முடித்து மருத்துவம், பொறியியல், சட்டம், கலை, அறிவியல் கல்லூரிகளில் இணைந்திருக்கிற பெரியார் பிஞ்சுகள், திராவிடர் மாணவர் செல்வங்கள் அனைவருக்கும் 'பெரியார் பிஞ்சு' இதழின் சார்பில் வாழ்த்துகள்!

# சாலை விதிகளைச் சற்றும் மீறோம்!




இழப்புகளில் இருவகையுண்டு. பல இழப்புகள் ஈடுசெய்யக் கூடியவை. மீண்டும் உருவாக்கம் பெறக்கூடியவை. சில இழப்புகள் ஈடுசெய்யவோ, மீண்டும் உருவாக்கவோ இயலாதவை. குறிப்பாக உயிரிழப்பு என்பது மீண்டும் பெற இயலாதது இழந்தால் இழந்ததுதான். எவ்வளவு முயன்றாலும், எவ்வளவு பொருள் செலவிட்டாலும் மீண்டும் உயிரைப் பெற முடியாது!

மருத்துவமும் விழிப்புணர்வும் போதிய அளவு இல்லாத காலத்தில், கொள்ளை நோய்கள் தாக்குதலால் மனிதர்கள் மாண்டனர். ஆனால், மருத்துவ வளர்ச்சி, விழிப்புணர்ச்சியின் விளை



வாய் கொள்ளை நோய்கள் தற்போது அறவே ஒழிக்கப்பட்டு, அவற்றால் இறப்பே இல்லை என்ற நிலை வந்துள்ளது.


ஆனால், இன்று விபத்தில் மாழ்வோர் எண்ணிக்கை மளமளவென உயர்ந்து வருகிறது. குறிப்பாக, சாலை விபத்துகள் அன்றாட நிகழ்வாகவும், அதிகம் நிகழ்வதாகவும் ஆகிவிட்டன.சாலை விபத்துகள் இருதரப்புப் பொறுப்புடையவை.நாம் சரியாக நடந்தாலும், அடுத்தவர் விதிகளை மீறினால் பாதிப்பு நமக்கும் ஏற்படும். எனவே, சாலையில் நாம சரியாகச் செல்வதோடு, மற்றவர்களும் சரியாகச் செல்வதற்குரிய விழிப்புணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் உருவாக்க வேண்டியது அனைவரின் கடமையாகும். சிறுவயதிலேயே சாலை விதிகள் சரியாகக் கற்பிக்கப்பட வேண்டும்: கடைப்பிடிக்கப்பட வேண்டும்.




தூக்கமின்மை, மது மயக்கத்தில் ஓட்டுதல், தள்ளாடி நடத்தல், அதிவிரைவு வாகனங்களை முறையாகப் பழுது பார்த்துப் பராமரிக்காமை, சாலை விதிகளை மீறல், பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுதல், முந்திச்செல்ல முற்படுதல், பதற்றம், காலம் கடந்து பயணித்தல், சாகசம் செய்ய முற்படல் போன்றவையே விபத்துகளுக்கான முதன்மைக் காரணங்கள் விபத்து என்பது எதிர்பாராமல் நடப்பது. ஆனால், இன் பல விபத்துகள் எதிர்பார்த்து நடப்பவை தெரிந்தே செய்யும் தவறுகள். சாலை வித் பின்பற்றி நடப்பது போலவே, காப்பு நடவடிக்கை கட்டாயம் தேவை. தலைக்கவசம் அணிதல், கண்ணாடி அணிதல், இடுப்புப் பட்டி கட்டிக்கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்க்கக் கூடாது.

சிறிது தூரந்தானே! சென்று வந்துவிடுவோம் என்று மேற்கண்டவற்றைத் தவிர்ப்பது, உயிருக்கு அழிவைத் தருகிறது. விபத்து என்பது நொடிப்பொழுதில் நடப்பது. எனவே, குறைந்த தூரம், நெடுந்தூரம் என்று பிரித்துப் பார்ப்பது தவறு. ஒருவரை வளர்த்து உருவாக்க பெற்றோரும் மற்றோரும் எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தனை உழைப்பையும், உருவாக்கத்தையும் ஒரு நொடியில் நொறுக்கலாமா? இழக்கலாமா? விழிப்புடனும், விதிமுறைப்படியும் நடந்தால் விபத்துகளைத் தவிர்க்க முடியும்.

## கிம்பெர்லே வைரச் சுரங்கம் (Kimberley Diamond Mine)



தென் ஆபிரிக்க நாட்டில் நார்தன் கேப் மாநிலத்தில் கிம்பெர்லே என்னுமிடத்தில் அமைந்துள்ள வைரச் சுரங்கம்தான் உலகிலேயே மிகப் பெரிய வைரச் சுரங்கமாகும். 1871 ஜூலை மாதம் தொடங்கி 1914ஆம் ஆண்டு வரை 50,000 தொழிலாளர்கள் கோடாரி மற்றும் மண்வெட்டியைப் பயன்படுத்தி 2,720 கிலோ கிராம் வைரத்தினை வெட்டி எடுத்துள்ளனர்.இந்தப் பள்ளமானது 42 ஏக்கர் மேற்பரப்பில் 463 மீற்றர் (1,519 அடி) அகலத்துடனும், 240 மீற்றர் (790 அடி) ஆழத்துடனும் காணப்படுகிறது.



பள்ளத்தின் ஒரு பகுதியில் குப்பைகளைக் கொட்டியதால் சுமார் 215 மீற்றர் வரை (705 அடி) தற்போது பள்ளத்தின் ஆழம் குறைந்துள்ளது. மேலும், 40 மீட்டர் (130 அடி) அளவிற்குத் தற போதுதண்ணீர் நிரம்பியுள்ளது. டி பீர்ஸ் (De beers) சகோதரர்களுக்குச் சொந்தமான பண்ணையில் கோல்ஸ்பெர்க் (Colesberg) என்னுமிடத்தில் Red Cap Party என்ற அமைப்பின் உறுப்பினர்களால் முதன்முதலாக இங்கு வைரம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

## கை நீட்டம்மா... கை நீட்டு!





கடமையாற்றிட கைநீட்டு
கற்றதைப் படைக்க கைநீட்டு
பெற்றதைக் கொடுக்க கைநீட்டு
துயர்துடைக்க கைநீட்டு...

வம்பளப்போர் வாய்மூட
வன்முறையாளர் கைஒடிக்க
கைநீட்டம்மா.. கைநீட்டு
வஞ்சகர்தம் முகம்கிழிக்க
வக்கிரநெஞ் சைப்பிளக்க
கைநீட்டம்மா... கைநீட்டு



கணினி இயக்க கைநீட்டு
கப்பல் ஓட்டவும் கைநீட்டு
கனிவு காட்ட கைநீட்டு
கயமையை விரட்டவும் கைநீட்டு....

கை நீட்டம்மா கை நீட்டு
நன்மை தீமை தான்அறிந்து
நம்பிக்கையோடு செயலாற்றி
நாட்டையும் வீட்டையும் காத்திடவே
கை நீட்டம்மா கை நீட்டு...!

- நாகினி, துபாய்



# சமூகத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு அரங்கக் கலைஞர்களுக்கும் முக்கியம்

## கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் தெரிவிப்பு

சமூகம் சார்ந்து சமூக விழிப்புணர்விற்கான வேலைத்திட்டங்களை அரங்கக் கலையின் ஊடாக மேற்கொள்வதன் மூலம் சமூகத்தை ஆரோக கியமானதாக மீளமைத்துக்கொள்ள முடியும். சமூகம் சார்ந்த அரங்கச் செயற்ப்பாடுகள் மேற் கொள்ளப்படுவது வரவேற்கப்படவேண்டியதொன் றாகின்றது என கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை யோசுவா அடிகளார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால் பால் நிலைச்சமத்துவம் என்னும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட தெருவெளி நாடக பயிற்சிப்பட்டறை நிகழ்வு கனகபுரம் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியில் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாச இணைப் பாளர் எஸ்.ஜீவநாயகம் தலைமையில் இடம்பெற் றது. இத் தெருவெளி நாடக பயிற்சிப்பட்டறையின பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் சமூகத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற பொறுப்பு அரங்கக் கலைஞரிடம் காணப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான சூழலில் அரங்கத்துறையினை எவ்வாறு பயன்படுத்தலாம் அரங்கக் கலைஞர்கள் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம் என்ற அடிப்படையில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கலைத்துறையில் புதிதாக நாங்கள் எதனையும் படைக்காவிட்டால் நிச்சயமாக நாங்கள் வளர முடியாது. இது கலைத்துறைக்கு பெரும் சவாலாக விளங்குகிறது. புதிதாக படைக்கும் சக்தியுள்வர்களை நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.புதிதாக படைக்கவேண்டும் என்ற ஆற்றல் எம்மிடையே அருகிவருகின்றது. அதனால் அதனை எவ்வாறு கலைத்திட்டமாக நகர்த்த வேண்டும் என்பதில் எமக்கு தேவையான ஆலோசனைகள் அனுகுமுறைகள் எமக்கு தேவைப்படுகின்றது. படைக்கும் சக்தி புதிதாக நம்மிடையே வளர வேண்டுமாயின் நிச்சயமாக நாம் மற்றவர்களை பாராட்ட வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். பிறரை பாராட்டுகின்ற பழக்கம் எம்மிடையே இல்லாமற் போவதன் காரணமாக எமது பிரதேசம் அபிவிருத்தி அடையாத நிலைமையினை கண்டு வருகினறது. கலைஞர்கள் மத்தியில் குறிப்பாக ஒரு கலைஞர இன்னொரு கலைஞரை பராட்டுகின்ற பாங்கு வளர்ச்சியடைய வேண்டும். உற்சாகப்படுத்துவது கௌரவிப்பது பாராட்டுவது என்ற விடயம் அதிகமாக குறைந்து கொண்டுவருகின்றது.

தெரு வெளி நாடக பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயககுநர் எஸ்.ரி.குமரன் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி. அருள்குமரன் ஆற்றுகை இணைப்பாளர் உ.ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப்பட்டறையினை திறம்பட வழிநடாத்தினார்கள் (63)

# நகராட்சி மன்றத்தின் பொன்விழா மண்டபம் திறப்பு



(சாவகச்சேரி)

நகராட்சிமன்ற 50ஆவது பொன்விழா நினைவாக மன்ற வளாகத்தில் 74மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட பொன்விழா மண்டபம் எதிர்வரும்19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. நகரபிதா,.தேவச காயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள அந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டு மண்டபத்தினை திறந்து வைக்கவுள்ளனர். உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 54மில்லியன் ரூபாசெலவில் கட்டப்பட்ட இரு மாடிக்கட்டடம் சிலவேலைகள் பூர்த்தியடையாத நிலையில் 20மில்லியன் ரூபா நகரசபை நிதியில் நிறைவுசெய்யப்பட்டது. இம் மண்டபம் திருமணம் உட்பட மங்கலநிகழ்வுகளை நடாத்தவும் பொதுநிகழ்வுகளைநடாத்தவும் வாடகைக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 600நபர்களுக்கு குறையாது ஓரேசமயத்தில் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கக்கூடியதாகவும் 150இற்கு மேற்பட்டோர் ஒரேசமயத்தில் மேசையில் இருந்து உணவு அருந்தக்கூடியதாகவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் போதிய வாகனங்கள் நிறுத்தும் இடவசதியும் காணப்படுகின்றது. (11)

# முச்சக்கரவண்டிகளை நிறுத்த இடம் ஒதுக்குமாறு கோரிக்கை

நெல்லியடி பகுதியில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு உரிய இடம் இல்லாது தாம் அலைந்து திரிவதாக முச்சக்கரவண்டிச் சாரதிகள். விசனம் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி நகரப்பகுதியில் முச்சக்கரவண்டிகளை நிறுத்துவதற்கு ஒரு இடம் இல்லாது வீதியோரங்களில் அவை நிறுத்தி வைக்கப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தாம் எங்கு நிறுத்துவது என கேள்வி எழுப்புகின்றனர்.

முச்சக்கர வண்டிச்சாரதிகள் தமது இடப்பிரச்சினை குறித்து கரவெட்டி பிரதேச செயலர் மற்றும் பிரதேசசபைத் தவிசாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இது தொடர்பாக இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா என முச்சக்கரவண்டி சாரதிகள் கோள்வி எழுப்புகின்றனர். (18)



அண்மையில் நடைபெற்ற தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தில் பதவியேற்பு நிகழ்வின்போது வரணி குடும்ப முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்களை வரணி குடும்ப இணைப்பாளர் திருமதி மதுரா ஞானச்சந்திரன் அவர்களிடம் 306 டீ1 இரண்டாவது மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் டாக்டர் தியாகராசா வழங்குகிறார்.

# பதிவிருக்கப் பெட்டகம்

பிரசன்ன விதேனகே சர்வதேச தரம் வாய்ந்த திரைக் கலைஞன். புலிகளின் சினிமாப் பிரிவான நிதர்சனத்திற்கு அன்று உதவியவர்களில் முக்கியமானவரும் கூட. இது அரைகுறையாக ஈழம் பற்றி அறிந்து வைத்திருப்போருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. அவர்கள் எதனைத்தான் ஒழுங்காக அறிந்திருக்கிறார்கள்? கலைஞன் எந்த மொழியில் இருந்தாலும் அவன் கலைஞன்தான். அவனது படைப்பை வெளியிட அனுமதிப்பதே நாகரிகமுள்ள சமுதாயத்தின் பணி.

இதற்கும் மேல், ஒரு படைப்பை வெறுமனே இனவாத அணுகுமுறையில் பார்க்க முடியாது. பிரசன்னவின் திரைப்படத்தை தமிழ் நாட்டில் திரையிட முடியாத சூழல் இருக்கிறதெனில, அது தமிழ் நாட்டின் முற்போக்காளர்கள் அறிவாளிகள் என்றெல்லாம் தங்களை சொல்லிக் கொள்வோர் அனைவரதும் தோல்வியாகும். எனவே இதனை சமரசத்திற்கு அப்பாற்பட்டு எதிர்க்க வேண்டியதே உண்மையான கலைஞர்கள், எழுத்தாளர்களின் பணி.

அதைவிடுத்து, நாங்கள், எதிர்க்கும் தமிழ் தேசியவாதிகள் பக்கமாகவும் இல்லை, அதே வேளை ஆதரித்தல் என்னும் பேரில் தமிழ் தேசியத்தை கொச்சைப்படுத்துவோர் பக்கமாகவும் இல்லை, என்பதான சப்பைக்கட்டு வார்த்தை ஜாலங்களை நிறுத்துங்கள். இப்படி சொல்லுவோர் அனைவரும் தங்களின் போலித்தனத்தை அம்பலப்படுத்துகின்றனர் என்பதே உண்மை.

முதலில் சொல்லுங்கள் ஐயா – தமிழ் தேசியம் என்றால் என்ன? இந்த இடத்தில் முன்னர் படித்த ஜோர்ஜ் ஓவலின் கூற்றொன்றுதான் நினைவுக்கு வருகிறது – ஒரு கருத்து எவ்வளவுதான் முட்டாள்தனமானதாக இருந்தாலும் அதனை சொல்லுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமா, இல்லையா? இப்படிக் கேட்டால் அனைவரது பதிலும் ஆம் என்பதாக இருக்கும் – அதுவே ஸ்டாலின் பற்றியதென்றால் அனைவரது பதிலும் இல்லை என்றாகும்.

இப்போது தமிழர் நிலையும் இதுதான். எவரும் இலங்கை அரசியலை வைத்து எதனையும் பேசிவிடக் கூடாது. குறிப்பாக தமிழர் பிரச்சினை பற்றி. அவ்வாறு பேசினால் அவர் மகிந்தவின் ஆள் – கோத்தாவின் ஆள் – உண்மையில் அவர்களுக்கு சேவகம் செய்யும் அனைவரும் இன்று தமிழ் தேசியம் என்று ஏதோ பேசுகிறார்களே – அவர்கள்தான் இந்த ஆட்சியை பலப்படுத்திக் கொண்டிருப்பவர்கள்.

– யதீந்திரா

பிரசன்ன விதானகே புலிகளின் நண்பனாக இல்லாமல் இருப்பதாலும், இனப்பிரச்சினையில் முற்போக்குவாதியாக இல்லாமல் இருப்பதாலும் அவரது படம் தடை செய்யப்பட வேண்டும் என வாதிடுபவர்களுடன் நம்மால் ஒத்துப் போக முடியாது. அது மிக அபத்தமானது. கலை சம்பந்தப்பட்ட விடயங்களில், இவை ஒரு அளவுகோல்களே கிடையாது. திரைக்கலையில் மிகச்சரியான அளவுகோலாக இதுதான் இருக்குமெனில், நம்காலத்து திரை நாயகனாக சீமானும், திரைக்காவியமாக காற்றுக்கென்ன வேலியும்தானே இருக்க முடியும்?

அன்றைய் திரையிடலில், யாரோ ஒரு போராளி கைநிறைய பேப்பருடன் சென்று, ஈழத்தில் யுத்தத்தின் பின் நடந்த அத்தனை கொடுமையையும் நான் ஆவணமாக வைத்திருக்கிறேன், உனக்கு அது பற்றி தெரிந்திருக்குமா என பிரசன்னவிடம் கேட்டாராம். அண்மையில் வெளிவந்த மிகமோசமான மட்டப்படமான ஆல் இன் ஆல் அழகுராஜாவில் கூட இதைப்போன்ற, மகா மோசமான அபத்தக்காட்சிகள் எதுவும் இடம்பெறவில்லை.

ஈழப்பிரச்சினை ஏதோ ஒலிம்பிக் ளோமா கற்கைபோலவும், இது பற்றிய விடயங்களில் யாராவது சம்பந்தப்படும்போது, அவரது தகைமைச் சான்றிதழ்களை கேட்பதை போல, அது தெரியுமா, இது தெரியுமா என எல்லோரும் கேட்க வெளிக்கிட்டால், நிலைமை என்னாவது? நாளையே, ஒருவர் விக்னேஸ்வரனிடம் சென்று, முள்ளிவாய்க்காலில் மலம் கழிக்க முடியாமல், ஒருநாள் நான் அந்தரித்து திரிந்தேன், உமக்கது தெரியுமா எனக் கேட்டால், அவர் தற்கொலை செய்வதை தவிர வேறு என்னவழி?

இலங்கைத்தமிழர் பிரச்சினையை மையப்படுத்தி ஈழத்திலும், ஈழத்திற்கு வெளியிலும் நடக்கும் சம்பவங்களை நாங்கள், காய்தல் உவத்தலின்றி ஒருமுறை அலசி ஆராய வேண்டும். அப்படியொரு சுயமதிப்பீட்டை செய்வோம் எனில், நிச்சயம் வெட்கப்படவே வேண்டி ஏற்படும். சமயங்களில் தமிழர்பிரச்சினை என்னவென்பது, தமிழர்களிற்கே தெரியவில்லையோ என்றுதான் நினைக்க வேண்டியுள்ளது.

செயற்படுத்த முடியாத கோபம், ஆற்ற முடியாத மனவேதனை, செயற்பட முடியாத மனநிலை என்ற கூட்டுக் கலவை உலகத் தமிழர்களை நகைச்சுவை நடிகர்களாக்கி விட்டுள்ளது.

– கியோரஸ்தமி

# ஓய்வூதியம் குறித்த தகவல்கள் எஸ்.எம்.எஸ்ஸில்




(கொழும்பு)
ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை குறுந்தகவல் மூலம் (எஸ்.எம்.எஸ்) பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு பொலிஸார்

(கொழும்பு)
எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பொருட்டு பொலிஸாரை இணைத்துக் கொள்ள பரிட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.




பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம் என் ஜே புஸ்பகுமார இதனைத் தெரிவித்தார். மாணவர்கள் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பரீட்சைகளில் மோசடி செய்வதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலைமையை தவிர்க்கும் பொருட்டு பொலிஸாரை இணைத்துக் கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

# விவசாயிகளுக்கு கடன் வழங்க 4000 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)
விவசாயிகளின் நலன் கருதி, அவர்களுக்கு பயிர்ச்செய்கை கடன் வழங்க 4000 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இக்கடன்கள் வங்கிகள் மூலம் வழங்கப்படும். உள்ளூர் விவசாயிகளை மேம்படுத்துவதும், பாதுகாப்பதும், அரசின் கொள்கை என ஜனாதிபதி தெரிவித்தார். குளங்கள் பாதுகாப்புப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நிர்மாண வேலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டார்.

வறட்சி நிவாரணங்களைத் துரிதமாகவும், முறையாகவும் அமுலாக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். சிறுநீரக நோய்கள் காணப்படும் பகுதிகளில் சுத்தமான குடிநீரை வழங்க அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விவசாய, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

உர நிவாரணம், விதைகள் விநியோகம், உத்தரவாத விலை அதிகரித்த வரி மூலம் உற்பத்தியாளரின் பாதுகாப்பு விவசாயிகளுக்கு கடன் வழங்கல் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, மகிந்த யாப்பா அபேவர்தன, ஜோன்ஸ்டன் பெர்



நாண்டோ, பிரதி அமைச்சர்களான எச். ஆர். மித்ரபால, இந்திக பண்டாரநாயக்க, நிதி அமைச்சின் செயலர் கலாநிதி பீபி. ஜயசுந்தர உட்பட அரச உயர் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துக் கொண்டனர்.

# அகதிகளை மேலும் அனுப்ப ஆட்கடத்தல் காரர்கள் கி

## எனகிறார் ரொஹான் குணரட்ண

(கொழும்பு)
அவுஸ்திரேலியாவிற்கு மேலும் புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்பி வைக்க ஆட்கடத்தல்காரர்கள் முயற்சித்து வருவதாக சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்தோனேஷியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மேலும் படகுகளை அவுஸ்ரேலியாவிற்கு அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய மத்திய அரசாங்கத்தின் கடுமையான கொள்கைகள் காரணமாக படகுகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், சட்டவிரோத ஆட்கடத்தல்கா



ரர்களின் வலையமைப்பு இல்லாதொழிக்கப்படவில்லை. வெளிநாட்டு ஒத்துழைப்புடன் இலங்கை அவுஸ்திரேலிய ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் மலேசியாவில் கைது செய்யப்பட்ட இரண்டு பேர் அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

# கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எச்சரிக்கின்றனர் விரிவுரையாளர்கள்

(கொழும்பு)
கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் பதவி விலகல் போன்ற கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.ஆறு முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றிய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இரண்டு வார கால அவகாசம் போதுமானது என பல் கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றிய துணைத் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை தனியார்மயப்படுத்தக் கூடாது, ஆய்வுக் கொடுப்பனவுகளுக்கு நிபந்தனை விதிக்கக் கூடாது, அடிப்படைச் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும் ஆகிய சில முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள், கல்வித்துறையில் நிலவி வரும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் காலங்க



ளில் மக்களுக்கு தெளிவுபடுத்த உத்தேசித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

# ஏ.ரி.எம். அட்டையை திருடி மோசடி செய்த நபர் கைது

ஏ.ரி.எம். அட்டையை திருடி மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஜாஎல பிரதேசத்தில இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் குறித்த அட்டையின் உரிமையாளரது கணக்கிலிருந்து 12,4000 ரூபா பணத்தை மோசடியான முறையில் மீளப்பெற்றுக் கொண்டுள்ளார்.ஏ.ரி.எம். அட்டையின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்தி பிரதேசத்தின் பல இடங்களில் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார். 20 வயதான சந்தேக நபர் நேற்று நீர்கொழும்பு நீதவானின் எதிரில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தலாய்லாமாவின் கோரிக்கைக்கு ஹெல உருமய கண்டனம்

ජාතික හෙළ උරුමය
JATHIKA HELA URUMAYA
NATIONAL HERITAGE PARTY

(கொழும்பு)
இலங்கையின் பௌத்தர்கள் தொடர்பில் தீபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய்லாமா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் வருத்தமடைவதாக ஜாதிக ஹெல உருமய தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் மியன்மரில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துமாறு தலாய் லாமா கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த 4ஆம் திகதி அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தார்.இந்தநிலையில், இவ்வாறான கருத்துக்களினால் சர்வதேசத்தில் இலங்கை தொடர்பான அபிப்பிராயம் சீர்கெட்டுப் போகும் என ஹெல உருமயவின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தலாய் லாமாவின் இந்தக் கருத்து தொடர்பில் எந்த வொரு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்காமை வருத்தமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# தேயிலை உற்பத்தி மேயில் அதிகரிப்பு

(கொழும்பு)
கடந்த மே மாதம் இலங்கையில் தேயிலை உற்பத்தியில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் கூடிய தேயிலை உற்பத்தி இடம்பெற்ற மாதமாக கடந்த மே மாதம் பதிவாகி இருக்கிறது.

அதேநேரம் தேயிலை வரலாற்றில் கடந்த மே மாதத்திலேயே அதிக கூடிய உற்பத்தி இடம் பெற்றுள்ளதாகவும், தெரிவிக்கப் படுகிறது.தேயிலை சபையை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இலங்கையில் இருந்து 2 கோடியே 74 இலட்சத்து 14 ஆயிரத்து 358 கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒருங்கிணைப்பு வாரம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)
இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் சமூக ஒருங்கிணைப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பிக்கப்படுள்ளது.இதன் பொருட்டு வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பிரதேசங்களில் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

# தங்கம் கடத்திய இருவர் சென்னை விமான நிலையத்தில் கைது


(கொழும்பு)
சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தங்கம் கடத்தி வந்த இலங்கையர் இருவர் கைது செய்யப்பட்டதாகவும் 3 கிலோ கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சென்னை விமான நிலையத்தில் சோதனை இடப்பட்ட போது முகமது (வயது 31) காசிம் (வயது 32) என்ற இரு இலங்கையர்கள் 3 கிலோகிராம்




தங்கத்தைப் பொடியாக்கி தேயிலையுடன் கலந்து மிக சூட்சுமமாக கடத்திவந்ததாகவும் அதிகாரிகள் அவற்றைக் கண்டுபிடித்து கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்வரும் உருவைப் பயன்படுத்தி 23, 24 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.
இவ்வுருவில் இரு நகரங்களில் உள்ள இரு பாதைகளின் படங்கள் காணப்படுகின்றன. இல 1 சந்தை, 2 வங்கி, 3 பூங்கா, 4 மிருகக்காட்சிசாலை என்பவற்றைக் குறிக்கின்றன.






23. நிலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே எவ்விடத்திற்குச் செல்வதற்குக் குறைந்த தடவைகள் வலப்பக்கம் திரும்ப வேண்டும்.
1) சந்தை 2) பூங்கா 3) வங்கி 4) மிருகக்காட்சிசாலை

24. கலா தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே சென்றால், எவ்விடத்திற்குச் செல்வதற்குக் கூடிய தடவை இடப்பக்கம் திரும்ப வேண்டும்?
1) சந்தை 2) பூங்கா 3) வங்கி 4) மிருகக்காட்சிசாலை

25. 
இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 14 2) 13
3) 16 4) 15

26, 27 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

26. 


27. 





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I

# கல்வி முரசு

2 மணி

* எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையை எழுதுக.
* 1, 2 ஆகிய வினாக்களில் நான்கு அடைப்புகளில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பிலுள்ள இரு உருக்களுக்குமிடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.

1. 



2. 


3. பின்வருவனவற்றில் சிறு குழந்தையின் உள்ளத்தினை விபரிக்கும் கூற்று எது?
1) பழிவாங்கும் தன்மை கொண்டது 2) கல் நெஞ்சம் கொண்டது.
3) அன்பு அற்றது. 4) கள்ளங்கபடமற்றது.

4. கணவனும் மனைவியும் இணைபிரியாது சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு உகந்த உவமானமாக அமைவது எது?
1) நகமும் சதையும் போல 2) ஓடும் புளியம்பழமும் போல
3) தாமரை இலைத் தண்ணீர் போல 4) அல்லும் பகலும் போல

5. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதுமான மறு தாக்கம் உண்டு" என்பதனை விளக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
1) சுவரில் எறியும் பந்து திரும்பி வருதல் 2) பழங்கள் கீழே விழுதல்
3) கப்பல் செல்லுதல் 4) காற்றில் பறத்தல்

குறித்த ஒரு நகரில் கோயில், நூல்நிலையம், பூங்கா, மிருகக் காட்சிசாலை ஆகியன அமைந்துள்ள விதமும் அவற்றினை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன. அத்தகவல்களுக்கு ஏற்ப 6,7 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.




6. எந்த ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்தால் ஏனைய இடங்களிற்குக் குறைந்த அளவு தூரத்தில் செல்ல முடியும்.
1) பூங்கா 2) நூல் நிலையம் 3) கோயில் 4) மிருகக்காட்சிச்சாலை

7. ஒருவர் நூல் நிலையத்திலிருந்து பூங்காவிற்குச் சென்று பின்னர் அங்க[illegible] மிருகக்காட்சிசாலைக்கு சென்று பின்னர் அங்கிருந்து நூல்நிலையத்தினூடாக கோயிலுக்குச் சென்றால் அவர் பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?
1) 210 2) 1500 m 3) 1000 m 4) 2100 m


8. ஒரு மோட்டார் வண்டி 70 ஆவது கிலோ மீற்றர்க் கல்லில் இருந்து 80 ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்குப் 10 நிமிடங்கள் எடுத்தன. மோட்டார் வண்டி அதே கதியில் சென்றால் 140 ஆவது கிலோமீற்றர்க் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்?
1) 60 நிமி 2) 55 நிமி 3) 25 நிமி 4) 70 நிமி

9. 4 kg கௌபியின் விலை = 2 kg சீனியின் விலை
4 kg சீனியின் விலை = 1 kg கடலையின் விலை
எனின், பின்வரும் அட்டவணைக்கேற்பக் கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

| தர்சன் | அஜித் | முபாரக் | கிறிஸ்ரி |
|---|---|---|---|
| 6 kg கௌபி | 4 kg கௌபி | 2 kg கௌபி | 1 kg கௌபி |
| 2 kg சீனி | 3 kg சீனி | 2 kg சீனி | 3 kg சீனி |
| 1 kg கடலை | 1 kg கடலை | 2 kg கடலை | 2 kg கடலை |

1) தர்சன் 2) அஜித் 3) முபாரக் 4) கிறிஸ்ரி

10. 3 போத்தல் தேனின் நிறை = 6 தேங்காய் பால்மா பைக்கற்றுக்களின் நிறை
2 தேங்காய் பால்மா ரக்கற்றின் நிறை = 4 அரிசிமா பைக்கற்றின் நிறை
அவ்வாறாயின் எந்தப் பையில் குறைவான நிறை உள்ளது.




11. ஒரு நகரத்தில் கோயில் பள்ளிவாசலிலிருந்து 70 m கிழக்கேயும், தேவாலயம் பள்ளிவாசலிலிருந்து 90 m வடக்கேயும், விகாரை தேவாலயத்திலிருந்து 70 m கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்ப விகாரை இருப்பது கோயிலிலிருந்து
1) 90 m வடக்கே 2) 70 அ வடக்கே 3) 90 m கிழக்கே 4) 70 m கிழக்கே

12. காவியா விஜயின் மகளாவாள் ரமணன் விஜயின் அண்ணா ஆவார். ராஜி விஜயின் சகோதரி ஆவார். காவியன் ராஜியின் மகனாவார். காவியாவுக்குக் காவியன் என்ன உறவு முறை?
1) தம்பி 2) மைத்துனன் 3) அண்ணா 4) மாமா

புகையிரத நிலையங்களிலிருந்து புகையிரதங்கள் புறப்பட உள்ள நேரம் பற்றிய விபரம் கீழ காணப்படுகிறது.

| புறப்பட்ட இடம் | புறப்படவுள்ள நேரம் மு. ப | பி. ப | குறிப்பு |
|---|---|---|---|
| வவுனியா | - | 2.30 | - |
| கண்டி | 6.30 | - | - |
| கொழும்பு | - | 1.00 | - |
| நுவரெலியா | 10.00 | - | இரத்துச்செய்யப்பட்டுள்ளது |
| யாழ்ப்பாணம் | 11.45 | - | 2 மணித்தியாலம் |

13. புகையிரதங்கள் புறப்படவுள்ள இடங்களை ஒழுங்கு முறையில் தருக.
1) கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், கொழும்பு 2) கண்டி கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா
3) கண்டி யாழ்ப்பாணம், கொழும்பு வவுனியா 4) கண்டி, நுவரெலியா, கொழும்பு, வவுனியா



14. ஒரு வகுப்பிலுள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்ததினங்கள் கீழே காணப்படுகின்றன.
லதா - 1998.01.24 சுதா - 1997.12.31
ராதா - 1998.11.20 சீதா - 1997.11.19
இதற்கேற்பச் சரியான கூற்று யாது?
1) சுதா லதாவிலும் இளையவள் 2) சீதா ராதாவிலும் மூத்தவள்
3) லதா ராதாவிலும் இளையவள் 4) சுதா சீதாவிலும் மூத்தவள்

பின்வரும் தகவல்களைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

| 1 kg சவ்வரிசி + 500g சீனி | 1 kg சவ்வரிசி + 250g சேமியா | 250 g சேமியா + 500g சீனி |
|---|---|---|
| ரூபாய் 380 | ரூபாய் 270 | ரூபாய் 250 |

15. 750 g சேமியா + 500 g சீனி இன் விலை யாது?
1) ரூ. 290 2) ரூ. 450 3) ரூ. 390 4) ரூ. 580

16. 3 kg சவ்வரிசி + 1 kg சேமியா + 750 g சீனி இன் விலை யாது?
1) ரூ. 1150 2) ரூ. 1240 3) ரூ. 1140 4) ரூ. 1510

2010ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 17, 18 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

2010ம் ஆண்டு ஜனவரி மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளினதும் வெள்ளிக் கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே
1) 4,5 2) 5,4 3) 4,4 4) 5,5

17. 2010ம் ஆண்டில் உள்ள வெள்ளிக்கிழமைகள் எத்தனை?
1) 53 2) 49 3) 50 4) 52


18. 2010ம் ஆண்டு 21 ம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்கு உரியதாகும். இதற்கேற்ப 19, 20 ஆகிய வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

19. அடுத்த ஒலிம்பிக் நடைபெறும் ஆண்டு
1) 21 ம் நூற்றாண்டின் முதல் தசாப்தம். 2) 21 ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம்.
3) 20 ம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தம் 4) 20 ம் 21 ம் நூற்றாண்டின் முதல் தசாப்தம்

20. 21 ஆம் 21 ம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்திற்கு உரிய ஆண்டு.
1) 2045 2) 2055 3) 2145 4) 2155

21. ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட இருபது பேர்களிடையே பதினைந்து பேர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும், பத்துப்பேர் குளிர்பானம் அருந்திக் கொண்டும் இருக்கின்றனர். அவர்களனைவரும் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டோ, குளிர்பானத்தை அருந்திக் கொண்டோ இருக்கின்றனர். சிலர் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்திக் கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டும் குளிர்பானத்தை அருந்தி கொண்டும் இருப்போர் எத்தனை பேர்?
1) ஏழு 2) ஐந்து 3) மூன்று 4) இரண்டு

22. ஒரு சதுரமுகியின் ஆறு பக்கங்களிலும் 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வரும் உருக்களில் காணப்படுகிறது.



இறுதி உருவில் மேல் முகத்தில் இலக்கம் காணப்படும் விதம் யாது?


(1) 3 (2) 4 (3) 5 (4) 6

# ஊடக எழுத்தறிவும்- ஊடகக் கல்வியும்

## அறிமுகம்

தொடர்பாடல் ஊடக செயலொழுங்கின் தாக்கமும், இடைவினை ஊடாட்டமும் எமது வாழ்வியலில் ஒன்றிணைந்ததாக மாற்றம் பெற்றுள்ளன. தொடர்பு மற்றும் ஊடகபயன்பாடு இன்றி எமது இயங்காற்றல் நிகழமுடியாத அளவிற்கு அதன் செல்வாக்கு அகலப்படுத்தப்பட்டும் ஆழப்படுத்தப்பட்டும் உள்ளது எமது அன்றாட கருமங்களை இலகுவாகவும் வேகமாகவும். நேர்த்தியாகவும் முன்னெடுப்பதற்கும் உலக மாற்றங்களுக்கு ஏற்ப எம்மை இயற்படுத்திக் கொள்ளவும் தகவல் சமூகத்தின் பிரஜையாக மாற்றம்பெறவும் அறிவுச் சமூகத்தின் குறிகாட்டியாக கணீப்புப் பெறும் மனிதவள மேம்பாட்டின அடையாளமாகவும் தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் பயன்நிலைகள் கவனத்தைப் பெற்றுள்ளன. இவ்வாறாக தொடர்பாடல் ஊடக செயற்பாட்டின் முக்கியத்து வத்தை உணர்கின்ற அதேவேளை அவற்றின் மறுபக்கமாக பாதகமான விளைவு களை தனிநபர் சமூகம் என்ற அடிப்படையில் ஏற்படுத்துவதையும் மறுக்கமுடியாது.


இத்தகைய பின்னணியில் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட அறிவுசார் திட்டமான தொடர்பாடல் ஊடகக்கற்கை பாடப்புலத்தை பாடசாலை மட்டத்தில் அறிமுகம்செய்து அதனூடாக ஊடக எழுத்தறிவை மேம்படுத்தல் ஆகும் இதனை விளக்குவதாக பின்வரும் கலைத்திட் எண்ணக்கரு படம் அமைகின்றது.




### ஊடகக் கல்வி எண்ணக்கரு

ஊடகக் கல்வி என்பது ஊடக அறிவை உருவாக்குவதற்கான கலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த கற்றல் கற்பித்தல் செயற்பரிமாணமாகும். அதாவது ஊடகம் மற்றும் தொடர்பாடல் செயலொழுங்கு தொடர்பிலான அறிவுசார், மனப்பாங்குசார், திறன்சார் அடிப்டைகளை கற்கின்ற அனுபவங்களுடன் தொடர்புபட்ட செயற்பாடாக அமைகின்றது.

பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடக தொடர்பாடல் அறிவுசார் அம்சங்கள், விளக்கங்கள், புரிதல்கள் ஆலோசனைகள், தூண்டல்கள், படைப் பாற்றல்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான கற்றல் சந்தர்ப்பங்கள் கற்பித்தல் ஒழுங்கமைப்புக்கள் இடம்பெறுகின்றன.




### ஊடக எழுத்தறிவு எண்ணக்கரு

ஊடக எழுத்தறிவு என்பது ஊடகக்கல்வியல் பெறுபேறாகும் யூரோப்பிய ஆணைககுழு ஊடக எழுத்தறிவு என்பது ஊடகத்தினால் முன்வைக்கப்படுகின்ற செய்திகளை நுகர்வதற்கும் பகுப்பாய்வதற்கும் விமர்சிப்பதற்கும் ஒப்பிடுவதற்கும் கட்டியெழுப்புவதற்கும் பெறுகின்ற திறன்சார் தகவுநிலை என வரையறை செய்கின்றது

ஊடக எழுத்தறிவு என்பது கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஊடாக பெற்ற அறிவு,திறன்,மனப்பாங்குசார், அனுபவங்களை நடைமுறை வாழ்வில் பயன்படுத்துகின்ற அதாவது பிரயோகிக்கின்ற நடத்தைரீதியான வெளிப்பாடாக அமைகின்றது.

ஊடக எழுத்தறிவில் ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் பரிமாணங்கள் தொடர்பிலான இயல்புகள், தாக்கங்கள், செல்வாக்குகள்,உள்ளடக்கங்கள், முன் வைப்புக்கள் நோக்கப்படுகின்றன பிள் ளையிடம் உருவாகின்ற நடத்தைரீதியான அல்லது பயன்பாடு மற்றும் பிரயோக ரீதியான ஆக்கபூர்வமான ஊடக பயன்பாடே ஆகும்.

### ஊடக எழுத்தறிவின் முக்கியத்துவம

ஊடககல்வி ஊடாக பெற்றுக்கொடுக்கின்ற கற்றல் அனுபவங்கள் ஊடக எழுத்தறிவுக்கான ஆயத்தநிலைகளையும், தூண்டல்களையும் ஏற்படுத்துகின்றன. அத்துடன் அபிவிருத்திக்கும், சகவாழ்வுக்கும், தொடர்பாடல்சார் தேரச்சி நிலைகளை விருத்தி செய்யவும் உதவுகின்றன. ஊடக அறிவு நிலைகள் பின்வரும் அடிப்படையில் எமக்கு அவசியமானவையாகவும் முக்கியம் பெறுவனவாகவும் அமைகின்றன.

**யா / கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஊடகக்கழகமும் வடமாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து ஊடக எழுத்தறிவு தினநிகழ்வை இன்று நடாத்துகின்றன. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக் கப்படுகின்றது.**

* ஊடக கலாசார தாக்கங்களிருந்து தனிநபர் சமூகத்தை பாதுகாப்பதற்கு உதவுதல்.

* ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கும், விளக்குவதற்கும் உதவுகின்றன.

* ஊடக உள்ளடக்கங்களை விமர்சன ரீதியில் நோக்குவதற்கும்,உள்வாங்கிக் கொள்வதற்கும் ஊடக தொடர்பாடல் பிரயோக மற்றும் பயன்பாட்டுத் திறன்களை விருத்தி செய்வதற்கும் பிரசித்தமான கலாசார தாக்கங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும்

* ஊடகம் - சந்தை தொடர்புகளையும் போக்குகளையும் உணர்ந்து கொள்வதற்கும், ஊகித்தறியவும் பயன்படுதல்

* சுதேச கலாசார அடையாளங்களை வேலைமயமாகவும் இருந்து பாதுகாப்பதற்கு உதவுதல்.

* நாளாந்த வாழ்வில் அபிவிருத்தி நோக்கில் ஊடக மற்றும் தொடர்பாடல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தல்.

* ஊடகம் - சமூக இடைத்தொடர்பையும், பங்களிப்பையும், ஊடாட்டத்தையும் வலுப்படுத்துவதற்கும்

* சமூக பொறுப்புமிக்க ஊடக நுகர்வு சமூகத்தை கட்டியெழுப்புதல் விமர்சன அனுகுமுறையை கட்டியெழுப்புதல்

* பயனுள்ள ஊடக விமர்சன அணுகுமுறையை கட்டியெழுப்புவதற்கு பயன்படுதல்.

*ஊடகவழி மூலமான வன்முறைகளையும், முரண்பாடுகளையும், விளங்கிக் கொள்வதற்கு உதவுதல்.

* ஊடகதொழில்நுட்ப பயன்பாடுகளையும்,யதார்த்தம் - தொழில்நுட்ப பொறிமுறைகளின் பிரயோகத்தை விளங்கிக்கொள்ளல்.

* ஊடக வன்முறை கவர்ச்சி நிலைகளில் இருந்து விழிப்புணர்வு பெற்று ஆரோக்கியமான ஊடகபயன்பாடுகளுக்கு உதவுதல்.

### முடிவுரை

சமகாலத்தில் ஊடக மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகள் ஊடாக தனிநபரிடமும், சமூகத்திலும் வன்முறைகளும், முரண்பாடுகளும் அதிகரித்துள்ளன. இதற்கு நேர்த்தியற்ற மற்றும் ஆக்கபூர்வமற்ற தொடர்பு ஊடக பயன்பாடுகளே காரணமாகின்றன. ஊடக வழியாக வன்முறை கவிர்ச்சிப் பொருளாக பிரச்சித்தி பெற்று வருகின்றது. இத்தகைய நிலை மைகள் ஆரோக்கியமான சமூகவிருத்திக்கு தடைகளாகவே உணரப்படுகின்றன. இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தொடர்பாடலையும் ஊடகங்களையும் பிரயோகிப்பதற்கு ஊடகக்கல்வி வழியான ஊடகஎழுத்தறிவு காலத்தின தேவையாக உணரப்படுகின்றது.

* * * *

ப.இராஜேஸ்வரன்
பொறுப்பாசிரியர்
ஊடகக் கழகம்
கொக்குவில் இந்துக் கல்லூரி


# கூட்டுறவு அங்கத்தவர்கள் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் பணியாளர்கள் கௌரவிப்பு விழா நேற்று கே.கே.எஸ் வீதி மனோகரா தியேட்டர் சந்தியில் அமைந்துள்ள அதன் பணிமனையில் சிறப்புற நடைபெற்றது.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட பனை தென்னை வள கூ.சங்கத் தலைவர் தலைமை வகித்து நிகழ்வை நடத்தியதுடன் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கேஅருந்தவநாதன் யாழ். மாநகர உறுப்பினர் து.இளங்கோ (றீகன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 2013 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள் எட்டுப்பேரும் இரண்டு பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



பனை அபிவிருத்திச் சபையின தலைவர் பசுபதி சீவரத்தினம் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் யாழ்.மாநகர சபை உறுப்பினர் து.இளங்கோ ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவு சமாசத் தலைவர் நா. கணேசன் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திருமதி நல்லதம்பி கனகம்மா உட்பட பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர் (பா)

# விண்ணப்பம் கோரல்

சுகாதார அமைச்சின் கீழ் மருந்து கலவை உத்தியோகத்தர் பயிற்சிநெறிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த (சா/த) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களிலும் முழுமையாக சித்தியடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும்.

பயிற்சிக் காலம் ஒரு வருடமாகும். இலங்கைப் பிரஜையாகவும் நல்லொழுக்கமுடையவராகவும் சிறந்த உடல் உள இடைப்பட்டவர்கள் நாட்டின் எல்லாப பகுதியிலும் சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை 08.08.2014 இற்கு முன்னர் செயலாளர் சுகாதார அமைச்சு, சுவசிறிபாய இல.385 சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ஸ தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிட வேண்டும். கடித உறையின் இடதுமேல் மூலையில் மருந்துக் கலவையாளர் உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளல் 2014 என குறிப்பிடல் அவ சியமாகும்.

(105)

# அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் வடமாகாண கல்வி முறைமை மீளாய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெறவுள்ளதுடன் அறிக்கையினை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் வெளியிடப்பட்டு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு வழங்கப்படவுள்ளது.

# எல்லை தாண்டி தாக்குதல்
# உக்ரைனுக்கு ரஷ்யா எச்சரிக்கை



(மாஸ்கோ)

உக்ரைன் நாட்டில் உள்நாட்டு போர் தீவிரமாக நடந்து வருகிறது. உக்ரைன் இராணுவத்துக்கும்; ரஷ்யாவின் ஆதரவு படையினருக்கும் இடையே இந்த சண்டை நடக்கிறது. தற்போது நுகான்ஸ்க் என்ற நகரில் இரு தரப்பினரும் பயங்கரமாக மோதி வருகினிறனர் அங்கு உக்ரைன் இராணுவ தாங்கிகள் எதிரிகள் மீது சரமாரியாக குண்டுகளை வீசி வருகினிறன. இதனால் நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 15 பேர கொல்லப்பட்டனர்.100இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட அனைவருமே அப்பாவிப் பொதுமக்கள் என்று ரஷ்ய ஆதரவு படையினர் கூறியுள்ளனர். இதற்கிடையே உக்ரைன் படை வீசிய குண்டு ஒன்று எல்லையைத் தாண்டி ரஷ்ய பகுதிக்குள் விழுந்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இதை யடுத்து ரஷ்யா உக்ரைனுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதில் எங்கள் மண்ணுக்குள் உக்ரைன் தாக்குதல் நடத்துவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இதன் எதிர் விளைவுகள கடுமையாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உக்ரைன் கூறும்போது, நாங்கள் ரஷ்யாவில் தாக்குதல் நடத்தவில்லை. ரஷ்ய ஆதரவுப்படையினரே ரஷ்ய எல்லைக்குள் குண்டு வீசிவிட்டு எங்கள் மீது பழிபோடுகின்றனர். ரஷ்யா எங்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை பொறுப பற்றதன்மாக உள்ளது என்று கூறியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# செவ்வாய்க்கு செல்லத்தயாராகும் அமெரிக்க தம்பதிகள்



அமெரிக்காவை சேர்ந்த தம்பதியினர் முதல்முறையாக செவ்வாய் கிரகத்திற்கு செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். ஜென் பாயிண்டர், டேபர் மெக்குலம் என்னும் அத்தம்பதியினருக்கு செவ்வாய் கிரகத்திற்கு செல்ல வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு. இதனை நடைமுறைப்படுத்த 'Paragon Space Development Corporation ' என்னும் நிறுவனத்தை தொடங்கிய அவர்கள், செவ்வாய் கிரகத்திற்கு செல்ல எளிமையான முறையை கண்டறிய ஆய்வு களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பயணத்தின் போது, சக்திவாய்ந்த கதிர்வீச்சுகளை தவிப்பது எப்படி, எந்த அளவில் உணவு, நீர் எடுத்து செல்வது போன்ற ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள இவர்கள், இந்த செவ்வாய் கிரக பயணத்திற்கு 'Inspiration Mars' எனப் பெயரிட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்திற்கு பயணம் மேற்கொள்ள சாதகமான சூழல் அமையும் என்பதால், அப்போது இந்த பயணத்தை மேற்கொள்ள தயாராகும் இத்தம்பதியினர், இப்பயணதிற்காக அமெரிக்க அரசின் நிதி உதவிக்காகவும், நாசாவின் Orion crew vehicle-iy பயன்படுத்த அனுமதிக்காகவும் காத்திருக்கின்றனர என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் 18இந்தியர்கள் இணை

ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற தீவிரவாத அமைப்பில் 18 இந்தியர்கள் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மராட்டிய மாநிலம் புனேயில் கடந்த 10ஆம் திகதி பரஸ்கானா பொலிஸ் நிலையத்தையொட்டி உள்ள சாலையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருந்த இடத்தில், ஒரு மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்ட குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இதில் பொலிஸ் அதிகாரி குலாப் கேடேகர் உடபட 3 பேர காயம் அடைந்தனர்.


இச்சம்பவம் தொடர்பாக மராட்டிய தீவிரவாத தடுப்பு படையினர் உள்ளூர் பொலிஸாருடன் இணைந்து விசாரணையை தொடங்கி விசாரித்து வருகின்றனர், இதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னையை சேர்ந்த இளைஞர் உட்பட 18 இந்தியர்கள்



ஈராக்கில் அரசுக்கு எதிராக போராடிவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளனர் என்று மத்திய உளவுத் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை



(சியோல்)


500 கிலோமீற்றர் தொலைவுக்கு பாய்ந்து சென்று எதிரியின் இலக்கை தாக்கும் சக்தி வாய்ந்த 2 ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியுள்ளது வடகொரியா.இந்த சோதனை உள்ளூர் நேரப்படி அதிகாலை1.20-1.30மணிக்கு நடத்தப்பட்டுள்ளது அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும், மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியிலும் வடகொரியா தொடர்ந்து அணுஆயுதத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பது குறிப்பிடத்க்கது.

# உயரமான ரயில்வே பாலம் இமய மலையில் கட்டுகிறது இந்தியா

இமயமலையில் ஈபிள் கோபுரத்தை விட 35 மீற்றர் உயரமுள்ள உல கின் உயரமான ரயில்வே மேம்பாலத்தை இந்தியா கட்டுகிறது. இதன் கட்டுமான பணி 2016இல் நிறைவடையும் என்று தெரிகிறது. வில்வளைவாக கட்டப்படும் இந்த மேம்பாலம் கட்டிமுடிக்கப்படும் போது 359 மீற்றர் உயரத்தை எட்டிவிடும். தற்போது சீனாவில் உள்ள பைபெஞ்சியாங் ஆற்றில் உள்ள ரயில்வே மேம்பாலம் 275 மீற்றர் உயரம் கொண்டதாக உள்ளது. இந்தியாவில் இந்த மேம் பாலம் கட்டி முடிக்கப்படும் போது சீனா தானாகவே இரண்டாவது இடத்திற்கு சென்றுவிடும். இம்மேம்பாலம் பொறியியல் அற்புத மாகவும் காட்சியளிக்கும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித் தனர்.

2002இல் தொடங்கப்பட்ட இதன் கட்டுமான பணி மோசமான வானிலை காரணமாக 2008இல் நிறுத்தப்பட்டது. ஆனால் இரண்டு வருடம் கழித்து மீண்டும் கட்டுமான பணி தொடங்க பச்சைக் கொடி காட்டப்பட்டது. கொங்கன் ரயில்வேயால் கட்டப்படும் இந்த மேம்பாலத்தை கட்டி முடிக்க 92 மில்லியன் டொலர் செலவாகும் என்று கூறப்படுகிறது. இப்பணி முடிவடையும் போது, பாரமுல்லா விலிருந்து ஜம்மு செல்லும் தற்போதைய நேரத்தை விட பாதி நேரமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழல் குறித்து மன்மோகன்சிங்கிடம் சி.பி.ஐ. விசாரணை நடாத்த முடிவு



காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட நிலக்கரி ஊழல் விவகாரத்தில், சி.பி.ஐ., மன்மோகன் சிங்கை விசாரிக்க முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2004ஆம் ஆண்டில் காங்கிரஸ தலைமையிலான கூட்டணி அரசில் மன்மோகன் சிங், நிலக்கரி அமைச்சக பணிகளை கவனித்தபோது, நிலக்கரி சுரங்கங்களை தனியாருக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.


அப்போது, நிலக்கரி சுரங்கங்களை தனியார்களுக்கு ஒதுக்கீடு செய்ததில் முறைகேடுகள் நடந்து இருப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

இந்த புகாரையடுத்து, இது பற்றி ஆய்வு செய்த மத்திய கணக்குத் தணிக்கைத் துறையினர் நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த ஊழலால் மத்திய அரசுக்கு ரூ.1.86 இலட்சம் கோடிக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக கடந்த 2012ஆம் ஆண்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதையடுத்து, இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உததரவிடப்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் நேரடி மேற்பார்வையில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை விசாரிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று சி.பி.ஐ. அதிகாரிகள் கருதுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மீண்டும் ஊழல் குற்றச்சாட்டில் பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி



பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி லஞ்ச ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிக்கியுள்ளார்.

2007ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற லஞ்ச ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டதாக நிக்கோலஸ் சர்கோசி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரதான் வழக்கு விசாரணையை எதிர்கொண்டார்.

தன்னுடைய அரசியல் மறுபிரவேசத்தைக் குறைத்து மதிப்பிடும் வண்ணம் நீதித்துறையைக் கைக்குள் போட்டுக் கொண்ட அவரது எதிரிகள் தன்னை இப்படியொரு கோரமான பிரச்சினைக்குள் மாட்டி விட்டதாக சர்கோசி குறை கூறினார். ஆனால் இப்போது அவரது தொலைபேசி உரையாடல் ஒன்று வெளியிடப்பட்டு மீண்டும் அவரை சர்ச்சைக்குள்ளாக்கியுள்ளது.

# பேருந்தில் பாடினால் அபராதம் கனடா அதிரடி நடவடிக்கை



பேருந்தில் பாட்டு பாடி தொல்லை கொடுக்கும்" ஆசாமிகளை கட்டுப்படுத்த கனடாவில் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


பேருந்தில் பயணம் செய்பவர்கள் பாட்டு பாடினால் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்று கனடாவில் உள்ள வின்னிபெக் நகர நிர்வாகம் அதிரடியாக உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

கனடா நகரங்களில் சிறிய இசைக்குழுவினர் அடிக்கடி பொது இடங்களில் பாடியபடி பயணம் செய்வது வழக்கம்.

தற்போது இந்த உத்தரவின் மூலம் அதற்கு முட்டு கட்டை விழுந்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே நகர நிர்வாகம் பேருந்தில் தீப்பிடிக்கும் பொருட்களை எடுத்து செல்வது, எச்சில் துப்புவது போன்ற குற்றங்களுக்கு அபராதம் விதிக்க அனுமதி வழங்கியுள்ளது. தற்போது பாட்டு பாடுவதற்கும் தடை விதித்துள்ளது.

# அச்செழுவில் மக்கள் சந்திப்பு அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு



(யாழ்ப்பாணம்)

அச்செழு வடக்கு ஜே/279 கிர்ராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் தம்பித்துரை கேதீசன் தலைமையில் நேற்று முன்தினம் அச்செழு வடக்கு வள்ளியப்பர் சிவன் ஆலயத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

கடந்த கால யுத்தத்தில் அழிவடைந்த எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்தவர் எமது தலைவரும் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவே. இதனை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது அவருடைய தன்னலமற்ற சேவையே எமது மாவட்டத்தின் அபிவிருத்திக்கு காரணமாக அமைந்திருக்கின்றது.

வடமாகாணசபைத் தேர்தல் நிறைவடைந்து அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கைப்பற்றி பல மாதங்கள் கடந்த நிலையில் எந்தவொரு அபிவிருத்திகளும் இல்லாமல் வெறும் மாகாண சபையாகவே காணப்படுகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரும் முயற்சியினால் இன்று உங்களுடைய கிராமத்திலுள்ள அச்செழு, தனிப்பனையடி வீதியினைப் புனரமைப்புச் செய்து தந்திருக்கின்றோம். தற்பொழுது அச்செழு, வேவிபுரம் ஒளிநிலா வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட வலிகாமம் கிழக்கில் மேலும் ஐந்து வீதிகளான உரும்பிராய், ஊரெழு மயான வீதி, உரும்பிராய் வாகையடி வீதி, கோப்பாய் இலகடி வீதி, அச்சுவேலி பயிற்றோலை ஆகிய வீதிகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதிகளிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தங்களுடைய சுயலாப அரசியலுக்காக அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தார்.

மக்களுடைய கோரிக்கைக்கு அமைய இவ்வீதிகளை புனரமைப்பு செய்கின்றோம். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வீதிகளை தாங்கள் புனரமைப்பு செய்வதாக ஏமாற்று வித்தைகளை மக்களாகிய உங்களுக்கு கூறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்திற்கும் பக்கபலமாக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொண்டு உங்கள் மீது அக்கறையாக செயற்பட்டு உங்களுடைய தேவைகளை நிறைவேற்றி தருபவர்களை இனி வரும் காலங்களிலாவது இனங்கண்டு செயற்படுவதற்கு முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் தமது கிராமத்தின் இரு உள்ளக வீதிகளைப் புனரமைப்புச் செய்து தந்தமைக்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதுடன், தங்களுடைய கிராமத்திலுள்ள மற்றைய வீதிகளையும் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கலந்துரையாடலில் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிரக் கட்சி உறுப்பினர் அருளானந்தம் ரஜீவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொது இடங்களில் வெற்றிலை துப்பினால் தண்டம்

(கொழும்பு)

பொது இடங்களில் வெற்றிலையை குதப்பி துப்புவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவிக்கின்றார்.

பொது இடங்களில் வெற்றிலையை குதப்பி துப்புவதால் சூழல் பாதிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, பொது இடங்களில் மதுபோதையில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவோர் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

மேலும் பொது மக்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அஜித் ரோஹண தெரிவிக்கின்றார்.

கால்நடைகளை பொது இடங்களில் விடுதல், அவற்றை பொது நீர்நிலைகளில் குளிப்பாட்டுதல், போக்குவர்த்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் வாகனங்களை கழுவுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அசாதாரண காலநிலை 1600 வீடுகள் சேதம்



(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களில் வீசிய பலத்த காற்றினால் சேதமடைநத வீடுகளின் எண்ணிக்கை 1,600 ஆக அதிகரித்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பலத்த காற்றினால் 6,000 பேர் வரை பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையுத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பில் குறிப்பிடுகின்றார்.

கடுங்காற்றினால் ஏற்பட்ட அனர்த்தங்களை கருத்திற் கொண்டு, பதுளை மாவட்டத்தில் 80 பாடசாலைகள் நேற்றும் மூடப்பட்டிருந்தன.

ஹல்தும்முல்ல மற்றும் வெலிமடை கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் ரோஹன கீர்த்தி திஸாநாயக்க தெரிவித்தார்.

மாணவர்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடுங்காற்றினால் வலப்பனை பிரதேசத்திலுள்ள 3 பாடசாலைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்திலேயே அதிக சேதங்கள் பதிவாகியுள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார். கடுங்காற்றினால் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

காற்றினால் வீடுகள் முழுமையாக சேதமடைந்த குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படுவதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் வீசிய பலத்த காற்று குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனினும் மத்திய மலைநாட்டின் மேற்கு பகுதிகளில் தென் மேல் பருவக்காற்று தொடர்ந்தும் வீசும் என திணைக்களத்தின் வானிலை தொடர்பாடல் அதிகாரி லக்ஷ்மி லத்தீப் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ்...

அபிவிருத்திக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் பிரான்ஸ் நாடு வழங்கி வரும் பங்களிப்புகளுக்கு அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, பிரெஞ்சுக் குடியரசின் அதிபர் பிரான்சுவா ஹெலனடேக்கும் வெளியுறவுத்துறை மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச் லோரன்ஸ் போபியஸ் மற்றும் பிரெஞ்சுக் குடியரசு மக்களுக்கும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, நன்றிகளையும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸியத் தூதுவர் ஜீன்போன் மொன்ஸாயியிடம் அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.

பழைய ஆட்சி முடிவடைந்து பிரான்ஸியப் புரட்சி தொடங்கியதைக் குறிக்கும் தினமான யூலை 14, 1789 ஐ நினைவு கூரும் முகமாக வருடந்தோறும் யூலை 14 ஆம் திகதி பிரான்ஸில் தேசிய தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நாடுகளின் தூதரக உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கசூரினா...

நபர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கொலை முயற்சியில் ஈடுபட்ட மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஐவர் அடங்கிய நண்பர் குழுவொன்று கசூரினாக் கடற்கரையில் மது அருந்தியுள்ளனர். இதன்போதே இவர்களில் நால்வர் இணைந்து மற்றைய நபரைத் தூக்கிச் சென்று கடலினுள் அமிழ்த்திக் கொலை செய்ய முயற்சி செய்துள்ளனர்.

இதனை அவதானித்துள்ள கடலில் ஆபத்தில் சிக்குபவர்களைக் காப்பாற்றும் பணியாளர்கள், குறித்த நபரைக் காப்பாற்றி கரை சேர்த்ததுடன், இவ்விடயத்தினை அங்கு கடமையில் நின்ற பொலிஸாரிடமும் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து, மேற்படி நால்வரும் தப்பித்து ஓட முயன்ற போதும், அவர்களில் இருவர் பொதுமக்களால் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அடிப்படை...

டறியப்பட்டுள்ளதாக, பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வு அறிவித்துள்ளது.

தனது பணிகளில் முதலமைச்சர் தலையீடு செய்வதாகவும், தன்னைப் பதவியில் இருந்து நீக்க அவர் முனைவதாகவும், பிரதம செயலர் குற்றம்சாட்டியிருந்தார். தன்னைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிப்பதாக பிரதம செயலரின் குற்றச்சாட்டுத் தொடர்பாக, தேசிய நல்லிணக்கத்தைக் கருத்திற் கொண்டு வரும 28 ஆம் திகதி தீர்வு ஒன்றை நீதிமன்றத்துக்கு முன்மொழியுமாறும் வடமாகாண முதலமைச்சருக்கு, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## உள்ளூராட்சி...

கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களே இன்று ஆராயப்படவுள்ளன. (92)

## விபத்தில்...

விமானப்படை வீரரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீனி வாங்குவுதற்காக கடைக்கு சென்று திரும்பும் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## போராட்டத்துக்கு...

முறைப்பாடொன்றைச் செய்திருந்தார். இதனடிப்படையில் இந்தப் போராட்டத்தைத் தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றைக் கேட்டதைத் தொடர்ந்து யாழ். நீதிமன்றம் இந்தப் போராட்டத்தை தடைசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது. (பா)

## கொழும்புடன்...

தங்களது நாட்டினால் முடிந்த முதலீட்டு வசதி, ஆதரவினை வழங்கவுள்ளோம். இதனால் இலங்கை மட்டுமல்லாது நெதர்லாந்தும் பல நன்மைகளை பெற்றுத் கொள்ளும்.

இலங்கையிலேற்பட்டு வரும் துரித வளர்ச்சியைக் கண்டு அதை பரிசோதித்ததன் பொருட்டு சில முன்னேற்றமடைந்த டச்சு கம்பனிகளுடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

பொஸ்கலிஸ், விற்றேன்ஸ் எவைட்ஸ், என்ராப் நோனியஸ், வான் டார் கனாப், எய்ஜ்கெல்காம்ப், மற்றும் ராபோ வங்கி ஆகிய டச்சு கம்பனிகள் தமது முதலீடுகளை டச்சின் நல் வளர்ச்சி நிதியத்தினூடாக இணைந்து வழங்குவதுடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்திற்கும் உதவுகிறது.

இவற்றுள் நீர் முகாமைத்துவம், சுகாதார வளர்ச்சி, விவசாய உற்பத்திகள், சக்தி மற்றும் வாழ்க்கை விஞ்ஞானம் ஆகியன பிரதானமானவையாகும்.

ஏனைய தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் எதிர்வரும் 2 நாட்களில் இடம்பெறும் பிரதான சந்திப்புக்களின் பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நெதர்லாந்து தூதுவர் லூயிஸ் டபிள்யூ. எம்.பியற், இலங்கையின் நெதர்லாந்து தூதரக அலுவலர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புகழ் சேர்க்கும் மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தெரிவிப்பு



கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சாதனைகள் படைக்கத் தமது பாடசாலை வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் எவ்வாறான தடைகளையும் தாண்டி வெற்றிவாகைகளை தமதாக்கி தமது பெற்றோருக்கும் பாடசாலை சமூகத்திற்கும் புகழை பெற்றுக்கொடுக்கும் மாணவர்களிற்கு தேவையான வளங்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதனூடாக உரிய துறைகளில் அவர்களை நட்சத்திரங்களாக ஒளிபெறச்செய்வதனுடன் அவர்களின் எதிர்கால வாழ்வினையும் செம்மையடையச்செய்ய முடியும் என யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் நேற்று மாணவர்கள் கௌரவிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் ஒரு பாடசாலையானது பல்வேறு துறைகளிலும் தனது மாணவர்களை பிரசவித்து அம் மாணவர்களின் வாழ்க்கைக்கே கலங்கரை விளக்காய் அமைகின்றது இவ்வாறான கல்லூரி அன்னைக்கு மாணவர்கள் செய்யக்கூடியவை தமது சாதனைகள் ஊடாக கல்லூரி அன்னையின் பெயரை உலகிற்கு ஓங்கச்செய்வதாகும். பாடசாலைகளிற்கு புகழும் சிறப்பும் சேர்க்க வல்லது அப்பாடசாலை மாணவர்களின் சாதனைகளும் வெற்றிகளுமேயாகும்

எனவே இங்குள்ள சாதனை படைத்த மாணவர்கள் உட்பட ஏனைய மாணவர்களும் பல்வேறான சாதனைகளை படைக்க வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

இப்பாடசாலையானது மகா வித்தியாலயத்திலிருந்து இன்று கல்லூரி எனும் பெயர் பலகையினை தாங்கி கம்பீரமாக திகழ்கின்றது. இப்பாடசாலையின் தேவைகள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் மாணவ சமுதாயத்தின் நலன் கருதி விரைவில் படிப்படியாக நிறைவு செய்யப்படும் என தெரிவித்ததுடன் மாகாண மட்டத்தில் தடைதாண்டலில் சாதனை படைத்த இப்பாடசாலை மாணவனையும் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அகிலதாஸ், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும், நல்லூர் ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான இரவிந்திரதாசன், பாடசாலையின் முன்னாள் அதிபர் செல்வி. மார்க்கண்டு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஓமந்தையில் விபத்து



வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இன்று அதிகாலை நீர்கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மீன்களை ஏற்றும் வாகனம் ஒன்று ஓமந்தைப் பகுதியில் தனது வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுள்ளார். அத்துடன் வாகனமும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (70)

# தப்புக் கணக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழமையாக அணியும் 'சிவப்பு நிறச் சால்வையை, கழுத்துப்பட்டி என்று நினைத்த தென்னாபிரிக்க பிரதிநிதியொருவர் அதனை தனது டுவிட்டரிலும் பதிவு செய்துள்ளார். தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை விஜயம் செய்தனர்.

அக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் அன்று மாலை சந்தித்து கலந்துரையாடினர். அந்தச் சந்திப்பின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி ரமபோஷ இருவரும் இணைந்து இருக்கும் படம் எடுக்கப்பட்டது. அந்தப் படத்தை, தென்னாபிரிக்கக் குழுவிலிருந்த பிரதிநிதியொருவர் அவசரமாக டுவிட்டரில் பதிவேற்றியுள்ளார்.

அதில், ரமபோஷ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது அவர், மிக அவசரத்தில்தான் இருக்கின்றார். தனது கழுத்துப்பட்டியைக் கூட கட்டுவதற்கு அவர் மறந்து விட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மோசடி நபருக்கு பிடியாணை

(கொழும்பு)

கொரியாவில் உள்ள ஒருவருடன் இணைந்து, அங்கு வேலை பெற்றுத்தருவதாக உறுதியளித்து, அதற்காக தனது வங்கிக்கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறு கூறி பலரை ஏமாற்றியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள, இல.2 கொட்டிகாவத்தை அங்கொடையை சேர்ந்த கிறிஸ்டின் தில்ஹாரி என்பவரை கைது செய்வதற்கான சிவப்பு ஆணையை கொழும்பு நீதவான் நீதிமன்ற பிரதான நீதவான் கிஹான் பிலாபிட்டிய நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் வெளிநாட்டில் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக, புலனாய்வு பொலிஸ் அதிகாரி சேனாரத்ன நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## உணவு ஒவ்வாமை 20 மாணவர் பாதிப்பு

உணவு உட்கொண்டதன் பின்னர் நோய்வாய்ப்பட்ட பஸ்ஸர கனவரெல்ல தோட்டத்தைச் சேர்ந்த பாடசாலையொன்றில் 20 மாணவர்கள் நமுனுகுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் நேற்று வழங்கப்பட்ட காலை உணவு ஒவ்வாமை காரணமாக மாணவர்கள் சுகவீனமுற்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர். உணவு வழங்கப்பட்ட முதலாம் தரத்தில் இருந்து, ஐந்தாம் தரம் வரையான மாணவர்களே இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். வயிற்றுவலி மற்றும் வாந்தி போன்ற நோய் அறிகுறிகளுடன் இந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இரும்புச்சத்துள்ள உணவை உண்போம்; கிளிநொச்சியில் விழிப்புணர்வு ஊர்வலம்

(கிளிநொச்சி)

'இரும்புச்சத்துள்ள உணவை உண்போம், நலம்,பலம், புத்தி கூர்மையினைப் பெறுவோம்' எனும் தொனிப்பொருளில் நேற்றுக் கிளிநொச்சியில் விழிப்புணர்வு ஊர்வலமும், கண்காட்சியும் இடம்பெற்றது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், பிரதேச சுகாதார பணிப்பாளர் பணிமனையும் இணைந்து தாய்மார் கழகத்தினூடாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது,



கிளிநொச்சி நகரில் ஆரம்பமான இவ்விழிப்புணர்வு நிகழ்வு திருநகர் தாய் சேய் நிலையம் வரை சென்று, பின்னர் கண்காட்சியும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், கரைச்சி பிரதேச செயலர், வைத்திய அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இயற்கையாகச் சூழலில் காணப்படும் உணவுகளைப் பயன்படுத்தி, சத்துணவை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், குறித்த உணவுகளை எப்படித் தாயாரிப்பது மற்றும், சிறுவயதிலேயே குழந்தைகளுக்குப் பழக்கப்படுத்துவது தொடர்பாகவும் இந்நிகழ்வு அமைந்திருந்தது.

குறித்த உணவு மற்றும் இயற்கையாக கிடைக்கும் உணவுப் பொருட்கள் தொடர்பான கண்காட்சியை மேலதிக அரச அதிபர் திறந்து வைத்தார். குறித்த கண்காட்சியை மாணவர்களும், பொதுமக்கள் பலரும் பார்வையிட்டனர். (29)

# சனத்தொகை தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

உலக சனத்தொகை தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்த வைபவம் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜயிக் ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

'இளைஞர்களுக்கான முதலீடு' என்ற தொனிப்பொருளிலேயே இம்முறை உலக சனத்தொகை தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

'இளைஞர் சமூகத்துக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் பெறுபேறுகளை பெறுதல்' என்ற தலைப்பிலான நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த நூலின் முதற்பிரதியை இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கையளித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க மற்றும் வெளிநாட்டுத்தூதுவர்கள், அரச உயர்மட்ட அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1989ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் யூலை மாதம் 11 ஆம் திகதி உலக சனத்தொகை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# '200 கிராம்' ஆரம்ப விழா

தேசிய பழங்களின் பாவனையை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பழங்கள் அபிவிருத்தி வாரம் மற்றும் பழங்கள் களியாட்ட நிகழ்வின் ஆரம்பவிழா நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஹொரன கனன்வில பழக்கன்று ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றது. 200 கிராம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கண்காட்சி தினமும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை இடம்பெறும்.




வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299)

(C/3735)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.